போன் நெ. 15. விலை 2 அணா. REGD NO. [illegible]

# திராவிடநாடு

மலர் 13 | 5—12—54 | இதழ் 23

## "வெண்ணிலா" விஜயம்!

"பீரங்கிகளுக்கு மார்புகாட்டி, போர்க்களத்திலே, மாற்றுரை எதிர்த்து நின்றோர்," போக பூமியிலே புரளும் பிரபுக்களல்ல! குண்டடி பட்டு, காலொருபக்கமும், கையொருபக்கமுமாக அலறிய வண்ணம் சாய்ந்தனரே—அவர்கள், கோமள விலாசங்களிலே குந்திக்கிடந்த கோலேர்ச்சிகளல்ல; குடியானவர்கள்! தாயகத்துக்கு வந்த ஆபத்தைத் தடுக்க சமர்க்களத்திலே ஓடிய குருதி, மாடிவீடுகளுடையதல்ல—மரத்துப்போன உடலும், உளுத்துப்போகா உள்ளமும் கொண்ட எங்களுடையது. இதுவரையில்தான் எத்தன் வாழவும், ஏமாளிகளாக நாங்கள் ஏங்கவுமான நிலைமையைச் சகித்து வந்தோம். போர் மூண்டாலும் நாங்கள்! அமைதி தவழும்போதும், நாட்டின் ஆலைகள் சுழல, நஞ்செயும் புஞ்செயும் பூத்துக்குலுங்கவும், நாங்கள்! ஆனால், பலன்மட்டும், பணதிபதிகளுக்கு. தென்றல் வந்தாலும் புயல் அடித்தாலும், சப்ரமஞ்சமும், உல்லாசக் கூடமும், ஒருநாளும் அவர்களைவிட்டுப் பிரிவதில்லை. ஆனால், எமக்கோ! வசந்தகாலமும் ஒன்றுதான்! வறண்ட காலமும் ஒன்றுதான்!! சுகம், சூதாடிகளின், சுயநலச் சொத்தாகிடும் துயரத்தை இனியும் சகிக்கமுடியாது, எம்மால்? ஏமாந்த காலம் போதும்! ஏழைகளின் எலும்பும் தசையும், சாகவும், வாழப் போராடவும்தானு! சஞ்சலமில்லாத வாழ்வு 'அவர்களுக்கு' மட்டுமே சதமா! எங்களுக்கு இல்லையா? இனியொரு விதிசெய்வோம்! அதை எந்த நாளும் காப்போம்!!"

*

என்ன கேட்கிறாய்?

ஆளும் உரிமை வேண்டும்!

அதுமட்டும்தானே......!

அல்ல, அல்ல. வாழும் உரிமையும் கேட்கிறோம்.

ஆளும் உரிமை — வாழும் உரிமை, இரண்டும் வெவ்வேறு.

வேறென்ன! முன்பிருந்தசர்க்காரை விரட்டிவிட்டு, புதிய ஆசாமிகளை அங்கே உட்காரவைப்பது மட்டுமல்ல, எமது ஆசை. அதற்காக அல்ல, நாஜி

**அரங்கண்ணல்**

வெறியனை எதிர்த்து, நாங்கள் எல்லாம் உயிரைத்தத்தம் செய்தது.

ஆளும் உரிமை கிடைத்து விட்டால் போதாதோ—உங்கள் கட்சியே, சபா மண்டபத்தில், சர்க்காரை நடத்தட்டுமே.

சபாமண்டபத்தோடு, இருந்து பழக்கப்பட்டதல்ல—எமது கட்சி. ஏழைகளின் இதயங்களிலே, குடிகொண்டது. அதனால், ஆளும் உரிமையும, அரச மண்டபத்தோடு இல்லாது, ஒவ்வொருவரின் இதயத்துள்ளும் இருக்கவேண்டுமென விரும்புகிறோம்.

புரியவில்லையே, உன் சித்தாந்தம்!

பணத்திரை, கண்ணை மறைக்கிறது போலும்—உமக்கு.

விபரம் கேட்கிறேன் — உன்னை!

பழைய சர்க்காருக்குப்பதில் புதிய சர்க்காரை, நாற்காலியில் உட்கார வைப்பது மட்டுமல்ல, எமது ஆசை. பழைய சர்க்கார் வைத்திருந்த துருப்பிடித்த ஆயுதங்களை நீக்கிவிட்டு புதிய ஆயுதங்களையும் ஏற்படுத்த விரும்புகிறோம்.

என்ன ஆயுதங்கள்? டாங்கியா விமானமா! சப்மரீனு! புதுக்குண்டா!!

பிரபுக்கு எப்போதும், அந்த ஆயுதங்களின் மீதுதான் பித்தம் இருக்குமாம். நான் குறிப்பிடுவது, உயிரைப்போக்கும் இந்த ஆயுதங்களையல்ல! உயிரை அணு அணுவாகச் சிதைக்கும் ஆயுதங்களை — இந்தக் காரியத்துக்கென சர்க்கார்கள் அமைத்துக் கொள்ளும் சட்டங்களை! சம்பிரதாயங்களை!

புதிய சட்டங்களும் செய்யப்போகிறீர்களா?

சட்டம், ஏட்டோடு நிற்காது; நாடு வாழும் திட்டங்களாக, மாறும். மெலிந்தோரை அடக்கவும், எளியோரை மிரட்டவும் மட்டும், இதுவரை வீசப்பட்டு வந்த சட்டங்கள், இனிமேல் அவர்களை வாழ்விக்கப்பயன்படும்—தேவைப்பட்டால், இந்த நல்முயற்சிக்கு குறுக்கே வரும் கோணல் மதியாளர்களைத் தாக்கும்.

அப்படியென்றால், தலைகீழ் மாற்றம் செய்யப்போகிறீர்களாக்கும்?

தலைகீழ்மாற்றம் அல்ல! இதுவரை தலைகீழாகயிருந்ததை சரியாக அமைக்கப் போகிறோம்!!

*

விவாதங்கள் நடைபெற்றன, வீதிகளில்! புதிய சர்க்கார்மட்டுமல்லவாமே—புதிய ஆட்சியையே அரும்பச் செய்யப்போகிறார்களாமே என்று பதைத்தனர், கோடீசுரர்கள். நாடு, ஹிட்லரின் படைகளால், கலங்கிக்கொண்டிருந்த நேரம்! வயல்கள், நாசமாகின்றன—பீரங்கிகள்பட்டு இல்லங்கள், இடிந்து

விழுகின்றன, விமானத் தாக்குதலால். பீதி. மக்களிடையில்! எப்படியாயினும் இக்கொடுமையை எதிர்ப்பது—என்று, ஏழைகளும் உழைப்பாளர்களும்ஒன்று திரண்டு சங்கநாதம் செய்கின்றனர். அப்போது, அங்கேயிருந்த பிரபுக்கள் செய்ததென்ன? நாட்டைக்காத்திட வீட்டுக்கொருபிள்ளைகளையா அனுப்பினர்? அனுப்புவரா, இலட்சாதிபதிகள்! அந்த 'உயிரிழக்கும்' வேலைகளுக்குத்தான் இருக்கவே இருக்கிறார்களே, ஏழைகள்!! எனவே, அவர்கள், வாய்த்த இந்தச் சமயத்தை நழுவவிடுவோமோ என்று பொருளைத் திரட்டிடும் 'வழக்கமான வேலையை'ச் செய்தனர். வழக்கமான வேலையையா? அல்ல, அல்ல. அப்படிச் செய்திருந்தால் கூடப்போதுமே!

எதிரி முன்னேறுகிறான்—இப்படியொரு சேதி, பீதியோடு வரும். பிரபு, வாங்கிய பொருளின் விலையை அதிகமாக்குவார்உடனே!" கோதுமைஇவ்வளவு விலையா?", வாங்கவருபவன்கேட்பான் திகைப்புடன். அதற்குள்ளே, இன்னொரு சேதிவரும்—நமது சேனைகள்'வெற்றிகரமாக வாபஸாகின்றன, என்று. உடனே பிரபு சொல்வார்! "ஸ்டாக் தீர்ந்துவிட்டது" இவ்வளவு விலையா, என்று கேட்டவன் திகைப்பான்—என்னகேட்டாலும் கொடுக்கிறேன், கோதுமையைக் கொடும்!-பெட்டிக்குள், முன்பைவிட நாலத்தனை பணம் செல்லும். பெருமூச்சோடு, கடைக்குச் சென்றவன் வீடு செல்வான்! வேதனை மக்களுக்கு-லாபமோ கொள்ளைகொள்ளையாக பிரபுக்களுக்கு. லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்களாகினர்! மாடிகள், மணிமாட கூடங்களாயின!! கள்ளமார்க்கெட் கனவான்கள் காரில் வழக்கபோல, பவனிவரலாயினர்!!! இந்தக் காட்சியை போர்க்களத்திலே பிணங்களைத்தத்தம்செய்த அவர்கள்கண்ணாரக்கண்டனர்- 'காலம் வரவில்லையேஇந்தக்காசாசைவெறியர்களுக்கு' என்று கலங்கியதும் ஞாபகம் வந்தது. அவர்கள் எதிர்பார்த்த காலமும் 'வந்துவிட்டது! எனவேதான், ஏழை, தீர்மானமாகச் சொன்னான்—எமது ஆட்சி, நாட்டின் ஏழை முதுகினரின்வளைந்த எலும்பை நிமிர்த்தப் பயன்படும்; தடுக்க வரும் தர்பார் பொம்மைகளைத் தரைமட்டம் ஆக்கும் என்று.

*

விமானங்களின் ஓசையை மோகன ராகமாக எண்ணி, குண்டு வீச்சுகளை மத்தள ஓசையாகக் கருதி, அலறி விழும் பிணங்களைத் தராசுக் கற்கள் என நினைத்து, அங்கே ஓடிடும் இரத்த வெள்ளத்தை அழுக்குப்படிந்த கைகளைக் கழுவும் நீராக மதித்து, கள்ள மார்க்கெட்டில் கொள்ளைலாபம் சம்பாதித்த குபேரர்கள், ஏராளம் உண்டு — எங்கும்! இப்படிப்பட்ட கொள்ளைலாபம் அடிக்கும். ஆசைக்காகவே, 'போர் ஏற்படாதா?' என்று பொருமுவராம். இதனால்தான், இன்று அமெரிக்க பணாதிபதிகள், எப்போது பார்த்தாலும் போரைப் பற்றியே முழக்கம் செய்து கொண்டுள்ளனர். இப்பேற்பட்ட அராஜகவாதிகளுக்கு, போர் நடப்பதெனும் சம்பவம், பூரிப்பைத்தானே தரும்? ஏழைகள் ரத்தம் ஆறாக ஓடினால்-அவர்களுக்கு என்ன! அவர்களுக்கு வேண்டியது, இருப்புப் பெட்டிக்குள் பணம் குவிய வேண்டும்! இதனால்தான், கடந்த உலகப் போரின் விளைவாக, பல குபேரர்களை, ஒவ்வொரு நாடும் கண்டது. போர்க்களமாகிக் கிடந்த ஐரோப்பிய மண்ணில் மட்டுமல்ல-போரின் வாடையே படாத பாரதமாதாவின் மடியிலுங் கூட, பல, தொந்திகள் பெருத்தன! போரிலே மறைந்த பிணங்களைப்பற்றிய புள்ளி விபரங்கள் சேகரிக்கும் துயரக் காட்சி ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, 'போரின் காரணமாகத் தமது இருப்புப் பெட்டியில் குவிந்த பணங்களை எண்ணிக் கணக்குப் பார்த்தனர், பணக்காரர்கள். "கள்ள மார்க்கெட்" என்ற புதுச் சொல் கிடைத்தது, அகராதிக்கு. புளகாங்கிதபுரியினராக, ஆயினர், பணாதிபதிகள். இத்தகைய புலிகளைத்தான், சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக, இவர்களெல்லாம் கொள்ளையடித்தபோது, சிறையிலே கிடந்த தேசியத்தலைவர்கள், விடுதலை கிடைத்ததும் எரிச்சலோடு பார்த்தனர்! ஏசினர்! கர்ஜித்தனர்! பாராளும் பண்டித நேரு, சிறையிலிருந்து வெளிவந்தார் —சீரிய தலைவனை வரவேற்கப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடினர்— பாமாலையும் பூமாலையும் குவிந்தது அவர் காலடியில் — "புனிதர்வந்துவிட்டார், சிறையிலிருந்து! பூக்கும், இனி, புது வாழ்வு. போக்கும், நம், துயரத்தை. தாக்கும், சந்தர்ப்பவாத சர்ப்பங்களை. ஆக்கும் இந்நாட்டை பொன்னாடாக" என்று ஆவலோடு 'தரிசித்தன' லட்சக்கணக்கான கண்கள். அவரும், மக்கள் தம் நம்பிகைகை நட்சத்திரமாகக் கர்ஜித்தார் மேடையில்—"பூட்டிய கதவு திறந்தது! விடுதலையாகிவிட்டோம் நாங்கள்! இதே போல பாரதத்தாயைப் பூட்டியிருக்கும் கதவும் விரைவில் திறக்கப் போகிறது. வெள்ளையன் ஓடப்போகிறான். ......பிறகு?......தாயின் மணிக்கொடி, கோட்டை கொத்தளங்களிலே பறக்கும்! சுதந்திரச் சூரியன் உதயமாகும்!! அந்த நாள் வந்ததும், நான் முதலில் என்ன செய்வேன் தெரியுமா? நாங்கள் வெளியே இல்லை என்கிற தைரியத்தில், தொந்திகளைப் பெருக்கிக் கொண்டனராமே, சிலர்! அந்த கள்ள மார்க்கெட் கழுகுகளைக் கழுவிலேற்றுவேன்! முச்சந்தியில் தொங்கவிட்டு போவோர் வருவோர் முகத்தில் காரியுமிழும்படி செய்வேன்!" கரகோஷம் அடங்க வெகுநேரமாயிற்று அன்று.

ஆனால், ஆவலோடு, அன்பர் பண்டிதர் சொன்னாரே...பிறகு?......என்று. அந்த, 'பிறகு' வந்தபின், என்ன ஆயிற்று? போரிலே போகசுகம் பெற்றவன், இதோ, தேசிய'டிக்கெட்' பெற்றுக்கொண்டு பண்டிதர் கண் எதிரிலேயே காங்கிரஸ் மந்திரியாக வீற்றிருக்கிறான்! ஆவடி காங்கிரசுக்கு அடியேனும் ஒரு பிரதிநிதி—என்று கூறுகிறான்!! அரசுக்கே, கடன் கொடுத்திருக்கிறேனய்யா, கடன்—தேசியக் கடனுக்காக எட்டு லட்சம் என்பெயரிலும், குடும்பத்தார் பெயரில் ஒரு பத்தும், போட்டிருக்கிறேன் — வருமான வரி இல்லாத சேமிப்பு! பத்து ஆண்டில் வட்டியோடுவரும், எனக்கு. வாட்டப் போகிறேன் என்று சொன்னாரே பண்டிதர்-அவர் வட்டிபோட்டுத்தரப்போகிறார், நான் 'கொள்ளையடித்த' பணத்துக்கு!!" என்று கூறாமல் கூறுகிறான்—தான் புதிதாக வாங்கிய, 'கதர்க்குல்லாயை'ச் சரிசெய்யும்படி, அருகிலிருக்கும் ஆகஸ்டுதியாகிக்குக்கட்டளையிட்ட வண்ணம். இத்தகைய 'பரமாத்மாக்கள்' புடைசூழ, பவனி வருகிறார், பண்டிதநேரு! ஆனால், அதோ ஒரு'நாடு—ஐரோப்பாவிலே இருப்பது—போரிலே ஹிட்லரின் கொடுமைகளைத் தாங்கிக் களைத்த நாடு—இரண்டு கோடிமக்கள் வாழும்பூமி—யுகோஸ்லோவேக்யா. இந்தியத்தலைவர்கள்சுதந்திரமுழக்கம்செய்த போது, யுகோவிலும், விடுதலை முழக்கம் கேட்டது. ஏழைகள், பிரபுக்களின் பிடியிலே சிக்கி வாதைப்பட்டுக்கொண்டிருந்தனர்—

"கால்வயிறு சாப்பிடவும்
போதாக்கூலி
கண்ணெதிரே வறுமையிடும்
கோரக்கூத்து!


## விற்பனையாளர்களுக்கு

எம்மிடம் தி. மு. க. 7 தலைவர்கள், பொங்கல் பெண், அன்னாவும் உழவர் குடும்பமும், புதுமணப் பெண், பொங்கல் மலர் (16 பக்கங்களுடன்) மற்றும் பல இருவண்ணம், மூவண்ணங்களில் ஆர்ட் தாளில் திட்டப்பெற்ற பொங்கல் வாழ்த்துகள் தருந்த மேலுறையுடன் விலை 3 பை முதல் 2½ அணா வரையில் 25 0/0 கழிவுடன் தரப்படும். மாதிரிக்கு 12 அணா தபால் தலை அனுப்புக.

பகுத்தறிவுப் பண்ணை
பிமநகர் :: திருச்சி.

நூல் போன்ற இளைத்தவுடல்!
மனைவிமக்கள்
நோய்கொண்ட பெற்றோர்கள்!
இளங்குழந்தை
பாலின்றி அழும் ஓசை!
ஐயோ, இந்தப்
பஞ்சையர்க்குத்துயரொன்றே
வாழ்க்கையாச்சு!
சால் வயிற்று முதலாளி
வாழ்கின்றானே
தன் கையால் சிறு துரும்பை
அசைத்திட்டானோ?"

என்று கேட்டுக்கொண்டிருந்த நேரம். —ஹிட்லர் நுழைந்தான் — அரசே, அவனை எதிர்க்க முடியாது திண்டாடிற்று. பிரபுக்களோ, 'யுத்தமா! யுத்த கடன் பத்திரங்கள் வேண்டுமானால் விலைகொடுத்து வாங்கிக்கொள்கிறோம்' என்று கூறியவாறு, பணம் பதுக்கும் வேட்டையிலீடுபட்டனர். "என்று தான் தன் கையால் சிறுதுரும்பை அசைத்திருக்கிறான், அவன்?", என்று கேட்ட ஏழையினம், ஹிட்லரின் எதேச்சாதிகாரத்தை யெதிர்த்துப்போராடி, கடைசியில்நேச நாடுகளின் உதவியால்நிமிர்ந்து நின்றது.பழையசர்க்கார்இல்லை! புதியஅரசு ஏற்படும் நேரம்!! அப்போதுதான், தலைப்பிலிருப்பதுபோல, வீதிக்கு வீதி விவாதங்கள் நடந்தன, அப்போது, ஒருவன், தீர்மானமாகத் தெரிவித்தான்—மக்களுக்கு:-

அரச அதிகாரம் கிடைத்தது மட்டும் போதாது. அந்த அதிகாரத்தின்மூலம் கிடைக்கும் பலன்கள், ஏழைஎளியவர்களின் மனம்புகும் விதத்தில், மாற்றங்கள் ஏற்படவேண்டும். அந்த மாற்றங்களைச் செய்யும்போது, கோடீஸ்வரர்கள் குறுக்கே வந்தால்—இதுவரை, எந்தெந்த சட்டங்களைக் கொண்டு, ஏழைகளாகிய எங்களை மிரட்டவும்; மீறினால் சிறையிலே பூட்டவும் செய்தனரோ, அதே 'ஆயுதங்களை' அவர்கள்மீது பிரயோகிப்போம். ஆட்சி உரிமை பெற்றோம்! இதனை ஏழைகள் வாழும் உரிமையை உண்டாக்கப் பயன்படுத்துவோம்!!" என்று சொன்னான். அப்படித்தான் முழக்கமிட்டார், பண்டிதர்! கர்ஜனை காற்றோடு போயிற்று!! ஆனால், இவனோ, கர்ஜனையை, சட்டமாக்கிக் காட்டினான் —சொல்லியதைச் செய்தான் — உலகச் சோலையிலே யுகோஸ்லோவேகியா ஒரு உன்னத நாடெனத் திகழும் படிச் செய்தான். அந்த சோலை மலைச் சுந்தரன்—யுகோ விடுதலை வீரன்—மார்ஷல் டிட்டோ, பெல்கிரேடை விட்டுப் புறப்பட்டு, டில்லி நோக்கி வந்துகொண்டிருக்கிறார் — டில்லி சர்க்கார் அவரை அழைத்திருக்கிறது—அவர், வருகிறார்.

*

டிட்டோ!—இந்தப் பெயர், உலக அரங்கில் ஒரு விசித்திரமான இடம்

(5-ம் பக்கம் பார்க்க)

# கீழே விழுந்த பழம்!

ஒரு பழம்! உலகுக்கே உன்னதமான ஆராய்ச்சிகளை வழங்கிற்று.

சின்னஞ்சிறு ஆப்பிள்! மரத்திலிருந்து விழுந்தது!!— அது தந்தது, அருமையான சிந்தனையை.

"ஏன், விழுந்தது?"—பழம் விழுந்ததைப் பார்த்தவன், கேட்டான், தன் உள்ளத்தை.

பிறரை பார்த்துக் கேட்டிருந்தால், "பழம், ஏன் விழும்? பழுத்ததால், விழுந்திருக்கும்!", என்றே பதில் தந்திருப்பர். இந்தப்பதில், பலரும் சொல்லக் கேட்டு, அவன் சலித்துப்போன பதில். ஆகவே, தன்மனதைக்கேட்டான். "விழுந்தபழம் நேரே, ஏன் பூமியை நோக்கி விழவேண்டும்?" கேள்வி, நியூட்டனுக்கு ஆளாக்கும், எவனாவது இன்னொருவனைக் கேட்டால். அவனோ, தன் சிந்தனையைக் கேட்டான்! சிறுகல்லை ஆகாயத்தில் வீசி, அதுவிழும் வேகத்தைக் கணக்கிட்டான்!!உயரமான இடத்திலிருந்து ஒரு பொருளைப்போட்டு அது பூமியை நோக்கிவந்துசேரும் வினாடிகளை எண்ணினான்! விளைவு, விஞ்ஞான உலகுக்கு, விசித்திரமான உண்மை கிடைத்தது—நியூட்டன்—வரலாற்று மனிதனான்—பூமிக்கு, ஆகர்ஷண சக்தி உண்டென்று விளக்கினான். இது, அங்கே—இங்கிலாந்தில்!

ஒரு பழம் — உன்னதமான, உண்மையை, உலகுக்கு வழங்கிற்று.

இதோ, ஒரு பழம்! பாரதப் பிரசங்கி, பக்தி பிரவாகத்தோடு விவரிக்கிறார்— பாண்டவர்கள் ஆரண்யவாசம் செய்தபோது, பாஞ்சாலி கேட்க, அர்ஜுனன் அறுத்துத்தந்தானாம். அது, முனிவர் ஒருவருடையதாம்! அவர்கண்டால் ஆபத்துவரும் என்றஞ்சி, இருந்த இடத்திலே அதைக் கொண்டு வைக்க தர்மரும் தம்பிகளும் சக்கர பாணியை துதித்தனராம்—நீலமேக சியாமள வர்ணன் வந்தாராம்—நெஞ்சத்துஉண்மைகளைஒவ்வொருவரும் சொன்னால், மரத்துக்குப் பழம் போகும் என்றாராம். ஒவ்வொருவரும் உண்மைகளைச் சொல்ல, கீழே விழுந்த பழம், உயர நோக்கி, ஓரிடத்தில் வந்து நின்றதாம்! பாஞ்சாலி, உண்மையை மறைத்தாளாம்— உடனே பழம் பூமிக்கு வந்ததாம்—கண்ணன் சிரித்துக் கொண்டே, "நீ பொய் சொன்னாய், திரௌபதா!", என்று சொல்ல, அவள் உண்மையைச் சொன்னாளாம்—"ஐவரின் பத்தினி நான்! இந்த ஐவர்எனக்கிருந்தாலும் கூட, உள்ளத்தின் ஒரு கோடியில் கர்ணன் மீதும் என்கண்கள் பதிந்திருக்கின்றன", என்று. பக்திரசம் சொட்ட வர்ணிக்கிறார், புராணீகர்!

"ஐம்புலன்களும்போல்
ஐவரும் பதிகளாகவும்
இன்னம் வேறொருவன்
எம் பெருங்கொழுநனுவதற்கு
உருகும் இறைவனே
எனது பேர்தயம்
அம்புவி தனில்
பெண் பிறந்தவர் எவர்க்கும்
ஆடவர் இலாமையினல்லா
நம்புதற் குளதோ
வென்றனள் வசிட்டனல்ற
மனைவியே யனையாள்"

இன்னம் வேறொருவன்! எம் பெருங்கொழுநனுவதற்கு!! —கவனித்தீர்களா, கவிதையை? உருகுதாம் உள்ளம்! புராணீகரும் மனமுருகியே வர்ணிக்கிறார், இதனை! இந்த உண்மை கேட்டதும்......உடனே பழம்போய் ஒட்டிக்கொண்டதாம்!!

ஒரு பழம்—விஞ்ஞான உண்மையைத்தர பயன்பட்டது, அங்கே.

ஒரு பழம்—புராணப் பெருமையை விளக்கப் பயன்படுகிறது, இங்கே.

நியூட்டனுக்கு கோயில் கட்டி, யாரும் கும்பிடவில்லை, அங்கே.

வேதவியாசருக்கும் கண்ணபிரானுக்கும், 'பத்தினி' பாஞ்சாலிக்கும், விழாக்கள் குறையவில்லை இங்கே.

இரண்டும், கீழேவிழுந்த பழங்கள் தான்! என்ன செய்வது! அறிவு நடை போடுகிறது, அங்கே! மகாத்மீயம், பவனிவர முயல்கிறது, இங்கே!!

★

# சட்டம் வருகிறதாம்!

புறப்படப்போகிறதாம், புதியதோர் சட்டம்! கோழி கூவுமுன் எழுந்து கும்பிருட்டுக்குப்பின் குடிசை திரும்பும் ஏழை நல்லானின் கோணல் முதுகை நிமிர்த்த அல்ல; குமுறும் எரிமலையென வயிறு தாளம் போட, குழந்தை குட்டிகளின் கண்ணீர் வழியும் முகத்தைக்கண்டு, கலங்கித்தவிக்க வண்டியிழுக்கும் வரதனின் வாட்டம் போக்க அல்ல; ஆலைப் பஞ்சுடன் தன் வாழ்க்கையும் போட்டியிட இலவம் பஞ்செனப் ஏங்குகிறுனே, உழைத்து அலுக்கும் தோழன் — அவனது உயர்வுக்கு வழி கூற அல்ல; குடிசைகளை அழித்து, அங்கே அழகுள்ள வீடுகளைக்காண விரும்புகிறேன் — என அன்பர் நேரு கர்ஜிக்கிருரே, அந்த இலட்சியத்தை நிறைவேற்ற அல்ல; ஏழைகளின் வறுமையுள்ளத்தில் பேராசைகளைக் கிளப்பும் 'கோயங்காவின்' கிராஸ்வோட்ஸ் போட்டி, கிண்டி குதிரைப் பந்தயம், 'நியுயார்க்' பருத்திச் சூதாட்டம் ஆகியவைகளை ஒழிக்க அல்ல; அனுதினமும் வாடும் ஆசிரியர்களுக்கும் அவர்களை நிர்வகிக்கும் 'மானேஜ்மெண்டாருக்கும்' இடையே ஏற்படும் சிக்கல்களைத் தவிர்த்து சீரிய வாழ்வு தரும் வழியைக் கூற அல்ல; சிந்தனைச் சோலை மலர அல்ல; நாடு வாழ அல்ல; கேடுகள் களையப்பட அல்ல;

இச்சகம்பேசிகளுக்கும்,மனிதநீதியைத் துச்சமென எண்ணும் உயரப்பர்களுக்கும், புதுமைக்குப் பயந்து கூச்சலிடும் பசுத்தோல் போர்த்திய புலிகளுக்கும்—பாதுகாப்பு வழங்க! அடைக்கலம் தர!! புதியதோர் சட்டமாம்—புறப்படப்போகிறதாம், காமராஜரின் ஆட்சியில்.

ஆலயங்கள், ஆயிரமாயிரம் உண்டு — அங்கே, வைரக் குவியலும், தங்க ஆபரணங்களும் வெள்ளி ஆசனங்களும், நல்முத்தும், விற்ருல் வேதனையைப் போக்கக் கூடிய விதவிதமான நவரத்னங்களும் வேண்டிய அளவில் உண்டு. தம்பிரான் பறக்கிருர், அமெரிக்கன் செய்து தந்த அழகுள்ள 'பியுக்'காரில்! இதோ—ஜப்பான்காரன் அனுப்பிவைக்கும்சூடத்தை, ஆண்டவனுக்கு ஆராதனை காட்டிய வண்ணம், 'எடு, காசை' என்கிருர், அர்ச்சகர்! அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் அம்மையப்பனை, தேரில் ஏற்றி, தெருவீதி சுற்றி, சக்கரத்துக்கு அடியில் சில வேளைகளில் சிலர் பிணமாகவும், வெடிவிபத்துக்களால் வீடுகள் பற்றிக்கொண்டு எரியவுமான வேதனைகள் நீடிப்பதைக்கண்ணுரக் காண்கிரோம்!

சென்ற வாரம், திருப்பாதிரிப் புலியூர் தேவதேவனை இழுத்து வந்த எருது ஒன்று மிரண்டு, இளம் பெண்ணைக் குத்த, வெள்ளைக்காரன் செய்தனுப்பும் மருந்துகளால் அந்த அம்மணியின் உயிரைக் காப்பாற்ற முயலுகின்றனராம்—கடலூர் டாக்டர்கள்! அக்காரவடிசலும், அன்னபிஷேகமும், ஆராதனை உற்சவமும்—அமோகமாகச் செய்கின்றனர், கோயிலின் பேரால். அதற்கெனச் செலவிடப்படும் பணத்தை, வெடி வேட்டுக்கும், வீணர்தம் விழாக்களுக்கும் விரயமாகும் தொகையை—கல்விச்சாலைகளுக்கும், கனிமாடகூடங்களுக்கும் செலவிடச் சொல்லி, சட்டம் வரவில்லை! இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே சென்னை அரசாங்கம் தொடுத்த வழக்கொன்றில், 'சுப்ரீம்' கோர்ட்டு வரை சென்று, தமது வெற்றியை நிலைநாட்டினர்—தில்லை வாழ் தீட்சிதர்கள். தங்கத்தகடுவேய்ந்த பொன்னம்பலத்தில் பொது நடனம் புரி நடராஜனைப் பரிபாலிக்கும் உரிமை தமக்கே உண்டு என்கிற 'சன்னத்து'ப் பெற்றனர், சனுதனக் கோடிகள், சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் இந்துமதஅறநிலையச் சட்டம்—எங்களிடம், நுழைய முடியாது! ஏனெனில், இக் கோயில் தில்லை வாழ் அந்தணர்தம், பரம்பரைச் சொத்து! என்று ஐயனின் அருளைக் காட்டியல்ல — அர்த்தராத்திரியில் கனவுமூலம் வந்துரைக்கும்படி செய்து அல்ல — 'அல்லாடி'கள் மூலம், வெள்ளையன் ஏற்படுத்திய சட்டத்தின், துணையால் வெற்றிபெற்றுக் காட்டினர், தில்லைத் தீட்சிதர்கள். அரசு, வரி வாங்கி வாழ்கிறதென்ருல், பக்தர்களின் காணிக்கையைக் கொண்டு கோயிலரசு நடாத்துகின்றனர், தில்லைவாழந்தணர்கள்!! அவர்கள் பெறும் காணிக்கையையும், சிற்றம்பலத்தானுக்கிருக்கும் சொத்துக்களையும், உலகத்தைப் புரக்கும் உமையொருபாகனின் 'பாங்கி'க் கணக்குகளையும் தணிக்கையிட, ஒரு அதிகாரியை நியமிக்க முடியாதவாறு, அரசின் முகத்தில் அறைந்தனர் — அவர்கள்! சட்டத்தின் சந்துபொந்தைத் தேடி, தமது சனுதனக் கோட்டைக்கு, பாதுகாப்புப் பெற்றனர். இந்த அக்கிரமத்தைத் தடுக்க, அவர்களுக்கு இடம் தந்த சட்டத்தின் சந்து பொந்தை அடைக்க,புதியதோர் சட்கம் புறப்படவில்லை!! அவர்கள் வாழ்கிருர்கள்—கிண்ணுரம் கொட்டியவண்ணம், கித்தாப்பு பேசிக் கொண்டு. மக்களை ஆளும் சர்க்கார், மண்டூகம்போலாயிற்று! மகேசன் வீசிய நெற்றிக் கண்ணைக் கண்டல்ல — மனுதாதாக்கள், சுப்ரீம் கோர்ட்டிலே பெற்ற வெற்றி கண்டு. வெற்றி, சட்டத்துக்கு! அதற்குக் கீழ்ப்படியத்தான் வேண்டும், அரசு!! ஆனுல், அந்தச் சட்டத்தைத் திருத்தி, மனித நீதியை நிலைநாட்ட, மக்களையாளும் அரசுக்கு, 'சக்தி' உண்டு. அந்த சக்தி, இதுவரையில், எழவில்லை!

ஆனுல், இப்போது கிளம்புகிறது —வெள்ளையன் ஏற்படுத்திய சட்

(13-ம் பக்கம் பார்க்க)

3-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றிருக்கிறது!! புள்ளிமானும், சந்தேகத்தோடு பார்க்கிறது — புலியும் அச்சத்தோடு நோக்குகிறது. இரண்டுக்குமிடையிலே யிருந்த வண்ணம் பெற்றிருக்கிறது. முதலாளிகள், எரிச்சலோடு பார்க்கின்றனர்! ஏழைகள் வாழ்வை நிமிர்க்க முயலுவோருக்கு சர்வ சாதாரணமாகக் கிடைக்கும், பரிசுதான் இது. பிரபுக்களின் கொட்டத்தை அடக்குவேன்! என்று கூறுவோனே, பாராட்டி, புகழ் மாலை சூட்ட முன்வராது, அமெரிக்கா. சகஜமே, இது! ஆனால், டிட்டோவின் நிலை, இந்த அளவோடு நின்றுவிடவில்லை. டிட்டோவை, ரஷ்யாவும் எரிச்சல் கண்களோடு பார்க்கிறது. பொதுவுடைமை ரஷ்யா!!

“விரோதி!”—இது, அமெரிக்கா சூட்டும் பட்டம்.

“துரோகி!!”—இது, ரஷ்யா வழங்கும், இழிமொழி.

இதனையே விசித்திரமான இடம் —என்கிறோம். இந்த விசித்திரத்துக்கு டிட்டோ, ஆளானதேன்? நாட்டு மக்களை பண்டிதர் போல மறந்தாரா? அல்ல! அல்ல!! விடுதலை முழக்கத்தின் போது என்னென்ன சொன்னாரோ, அவைகளை அவர் சார்ந்திருக்கும் அரசு செய்யத் தவறவில்லை. ஆட்சி பீடம் ஏறியதும் கள்ள மார்க்கெட் காரர்களின் சொத்தைப் பகிரங்கமாகக் கைப்பற்றினர்—ஆங்காங்கும் துளிர் விட்டுக் கிடந்த மதப் பூசல்களைக் கிள்ளி யெறிந்தார். அரசு, ஏழைக்கு! ஆண்டானுக்கு அல்ல!!—எனும் புதுமையை மலரச் செய்தார். பழைய யுகோ, உருமாறிற்று! புதுயுகம் பூத்தது!!

> “அரசை ஆளும் உரிமை பெற்றுவிட்டோம். அதுபோதும். என இருந்துவிடமாட்டோம். மன்னனை ஒழித்துவிட்டது மட்டுமல்ல, எமது லட்சியம். மக்களின் ஆட்சியை அமைப்போம்! அதிகாரம் எம் கைக்கு வந்ததுகண்டு வாலைக் குழைக்கின்றனர்—பிரபுக்கள். ஆட்சிபுரிய எமது உதவியையும் நல்கிறோம் — என, ஓடிவருகின்றனர். அவர்கள் கையிலே ஒப்படைக்க அல்ல, துப்பாக்கித் தூக்கி, துயரங்கள் ஏந்தி, இவ்வளவு காலமும் நாங்கள் பாடுபட்டது. இதனைப் பாட்டாளிகள் எவரும் ஏற்கார்! அதனால், திடமான முடிவு செய்துவிட்டோம்—எமது தேசத்தில் முதலாளித்துவத்தின் சின்னம் கூட இல்லாமல் வேரறுப்போம்”

என பார்லிமெண்டில் தீர்மானமும் செய்தனர். 1943 நவம்பர் 29-ந்தேதி! பதின்மூன்று ஆண்டுகள் பறந்துவிட்டன! இந்தக் காலத்தில், அன்று சொன்ன வார்த்தைகளை, நிறைவேற்றும் அரிய முயற்சி நடந்து வெற்றியும் பெற்றிருக்கிறது, யுகோ. வெளியார், அதை, ‘கம்யூனிஸ்டு நாடு’ என்றே அழைக்கின்றனர். ஆனால், ரஷ்யாவோ, இன்னும் ஐயக்கண்களோடு பார்க்கிறது!!

அண்மையில் நவம்பர் 7-ந்தேதி, மாஸ்கோவில், ரஷ்யப் புரட்சியின் நினைவாக நடைபெற்ற விருந்தில் யுகோ தூதர் வேதிக்கும் ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி முதல் செயலாளர் க்ருஷ்செவும், உரையாடினராம். அதுபோது, ரஷ்யசெயலாளர் கேட்டாராம், “நாங்களே மார்க்கசீய வாதிகள் என்று சொல்லுகிறீர்களாமே! நாங்களும் அப்படித்தானே சொல்லிக் கொண்டிருக்கிறோம். இருவருமே இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால், நம்மில்யார் உண்மையான மார்க்சீய வாதிகள்?”—என்று. அதற்குப்பதிலளித்த வேதிக், “எங்களுக்கு விடுதலை வாங்கித் தந்தது ரஷ்யா என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்—அது, சரியல்ல! விடுதலைபெற்றதுஎமது பாட்டாளிகள்!!”, என்று கூறியதோடு, பேச்சை முடித்திருக்கிறார். பாராட்டவேண்டியவர்களின் குரோதத்தையும், இயற்கை எதிரிகளின் விரோதத்தையும், தாங்கிக்கொண்டு உலக அரங்கில் உலவிவருகிறது, அந்த வெண்ணிலா! அவர் மீது, ரஷ்யா பாயக்காரணம் என்ன? ரஷ்யாவின் கோட்டில் நில்லாமல், அவர் தன்னிச்சையாகச் சிலகாரியங்களைச் செய்ய முயன்றார்! கொண்ட கொள்கைகளை இழக்கவில்லை—ஆனால் தனது நாட்டுக்குத் தக்கபடி அந்தக்கொள்கைகளை ஆக்கிக்கொண்டார். அதனால்தான், க்ருஷ்செவ், கூட, ‘உண்மையான மார்க்சீய வாதிகள் என்று சொல்லிக் கொள்கிறீர்களாமே!’ என்று யுகோ தூதரைக் கேட்டார். அந்தளவுக்குக் கம்யூனிஸ்டுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார், டிட்டோ! ஆனால், காய்கின்றனர், கம்யூனிஸ்டுகள்!!

*

> “டிட்டோ”—வரப்போகிறார். அவரைப்பற்றி இங்குள்ள கம்யூனிஸ்டுகளைக் கேளுங்கள் — ஏசுவர்! கூசும் சொற்கள் கூர் அம்புகளாகப்பாயும்!! — ஒரு வேளை, பிரச்னையாகுமோவென, விட்டுவிட்டாலும் விடலாம். ஆனால், அவரைப்பற்றி, இவர்கள் எழுதியிருக்கும் வசன வர்ணனைகள் எப்படிமாறும்? அவை, ஏராளம் உள்ளன!

டிட்டோமீது,மாஸ்கோவுக்குஅதிருப்தி வந்ததற்குக் கூடக்காரணம் உண்டு—யுகோ, ரஷ்யாவுக்கருகிலிருக்கும் நாடு—தன்னைக்கலந்தே எதனையும் செய்ய வேண்டுமென ரஷ்யா எதிர்ப்பது கூட சகஜம்தான்—ஆனால், இங்கேயுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு டிட்டோ செய்த கேடு என்ன!!

> “இன்று பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்யவாதிகளும், அவர்களுடைய கூலிப்பட்டாளங்களும் அஞ்சி நடுங்கும் புதிய யூகோஸ்லோவேகிய ஜனநாயகத்தைச் சிருஷ்டித்த மார்ஷல் டிட்டோ ...............”

1948-ல் “ஜனநாயகம்” எனும் கம்யூனிஸ்டு மாத ஏடு, இப்படிச் சித்தரித்தது! ஆனால், பிறகு—அதே டிட்டோவைத் தாக்க தயார்செய்த அகராதி மிகப் பெரிது!! இந்த நிலையைத்தான், டிட்டோ சந்திக்கவரும், பண்டிதர் அண்மையில் விளக்கியுள்ளார்—பண்டிதரின் நோக்கம், வேறு! எனவே, அவர் கூற்று, சாதாரணம் நமக்கு!! ஆனால், இதே கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்திருந்த ஜயசூர்யா எனும் பாராளு மன்ற உறுப்பினரும் கண்டித்துள்ளார். அவர்கள் மட்டுமல்ல, திசை திரும்பும் இப்போக்கு கண்டு, திகைப்போர் பலருண்டு! நாமும் கூடத்தான்! இந்தியக் கம்யூனிஸ்டுகளின் போக்கை அன்றுமுதல் இன்று வரை ஊன்றிப் பார்க்கும் அனுதாபிகளுக்கு, மிகவும் பரிதாபமாயிருக்கும்......

‘சோஷியலிஸ்டு’ — எனும் பெயர் பொறிக்கப்பட்டு—முதல்பக்கம் மட்டும் அச்சிடப்பட்டு—ஏனைய பக்கங்கள் தமிழில் ‘சைக்ளோஸ்டைல்’ செய்யப்பட்டு ஒரு ஏடு, ரகசியமாகக் கிடைக்கும், எனக்கு! காங்கிரசார் ஆகஸ்டு கலவரம் நடத்திய ஆண்டில்!! அதில், வெள்ளையர் துவக்கிடும் போரையும்—அதை விரும்பாத நேதாஜி கல்கத்தா வீட்டிலிருந்து தப்பிச் சென்ற விபரமும் தரப்பட்டிருக்கும். போருக்கு எவரும் உதவக்கூடாது, என்ற முழக்கம் இருக்கும். ஆனால், போரில், ரஷ்யா இறங்கியது எனத் தெரிந்ததும், யுத்தம், மக்கள் யுத்தம் எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது! நேதாஜி—துரோகி யானார்!!

இந்தியாவுக்குச் சுதந்திரம் வருமெனத் தெரிந்ததும், “நேருவின் கையைப் பலப்படுத்துவோம்!” என்று முழங்கினர். பிறகு, அதே நேருவின் ஆட்சியைத் தரைமட்டமாக்குவோம்—என, ‘தெலிங்கானா’ கண்டனர். கடந்த பொதுத் தேர்தலின்போதும், பெரியாரை நாடி பேருதவி பெற்றபோது—அவரைப் புகழ்ந்து படம்போட்டு, ‘பெரியார்! பெரியார்!!’ என்று எழுதினர். இன்றோ, ஏட்டில், ‘பெரியார்’ எனும் சொல்லைக்காணோம்— ‘ஈ. வே. ரா.’ தான் தென்படுகிறார்—இதுபோல, இவர்களின் நிலைமையை விளக்கும், நிகழ்ச்சிகள் பல உண்டு! இதே நிகழ்ச்சிகளால்தான், அவர்கள்மீது ஏற்பட்ட ஐயம் இன்னும் பலருக்குப் போகவில்லை! மாஸ்கோவில் பெரியா முதல்வராவார் எனத் தெரிந்தால்—

(12-ம் பக்கம் பார்க்க)




## 30. முடிவு என்ன?

கோர்ட்டு இடைவேளைக்காகக் கலைந்து மறுபடியும் கூடிய போது, நெடுமாறன் இன்னும் வேகமாகவும், உணர்ச்சியோடும் பேச ஆரம்பித்தார்.

"நீதிபதியவர்களே! நாட்டிலே நாலுஜாதிகள் ஏற்பட்டதையும், அதிலே உயர்ந்தோர் அடைந்த ஏற்றத்தையும், தாழ்ந்தோர் அடைந்த நலிவையும் விளக்கிக் கொண்டிருந்தேன், காலையில், அதைத் தொடர்ந்துதான் இப்பொழுது நான் பேசப்போகிறேன்.

நாட்டிலே பிரிக்கப்பட்ட நாலு ஜாதிகளில் நான்காவதாக வகுக்கப்பட்டாலும் கூட, அந்த நான்காம் வகுப்பினுலும், ஆயிரக்கணக்கான பிரிவுகளில் கடைசியாகத் தள்ளப்பட்டனர் இந்த ஆறுமுகத் திராவிடர்கள். ஆகவே அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட குடிசைகளில் வசித்து, அவர்களுக்கு இடப்பட்ட வேலைகளைச் செய்வதைத் தவிர வேறெந்த சமுதாயத் தொடர்பும் அவர்களுக்கு கிட்டவில்லை. அவர்களை தெருக்களில் நுழைய அனுமதிப்பதில்லை, நமது வகுப்பினர். குளங்களில்கூட குளிக்க அனுமதிப்பதில்லை. பூங்காக்கள் அவர்களை வரவேற்பதில்லை. எங்கு நோக்கினும் அவர்கள் துரத்தப்பட்டனர். அவர்களை கண்டாலே வெறுத்த பார்வையுடன் காரியுமிழ்ந்தனர், உயர்ஜாதியினர்.

சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு வாழ்ந்து வரும் ஆறுமுகங்களுக்கு பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுவதில்லை. ஆஸ்பத்திரிகளின் வாயிற்கதவுகள் அடைக்கப்படுகின்றன. தங்குவதற்கு மைலாப்பூர், மாம்பலம் பகுதிகளிலே இடம் கிடையாது.

இந்தப் பிரச்னை இன்று நேற்றையது அல்ல. அல்லது ஓரிரு ஆறுமுகங்களுக்கு மாத்திரம் அல்ல,

நூற்றுண்டு, நூற்றுண்டுகளாக, கோடிக்கணக்கான ஆதித்திராவிடர்கள் இந்த நாட்டிலே ஒதுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டு வருகின்றனர். வளர்ந்துவரும் எந்த நாகரிகமும் அவர்கள் குடிசைகள் பக்கம் போக விடாமல் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர், உயர்ஜாதியோர். "நீயும் நானும் ஒன்றுதான்!" என்று எந்த ஆதித்திராவிடனையும் பார்த்து கூறப் பிராமணன் எவனும் நினைப்பதில்லை. ஆதித்திராவிடன் என்றுல், பெயர் அழகாகயில்லை; ஆகவே உனக்கு "ஹரிஜன்" என்று அழகாகப் பெயர் சூட்டுகிறோம் என்று ஏமாற்று வாதம் பேசுகின்றனர் தேசியத் தோழர்கள்.

'ஹரிஜன்' என்று கூறி, அவர்கள் தனித் தன்மையை மேலும் உறுதியாக்கி, நாடெங்கும் அந்த ஹரிஜனங்களைப் பாதுகாக்க சங்கங்கள், இலாகாக்கள், போர்டுகள் எல்லாம் நிறுவப்படுகின்றன. இவைகள் எதுவும், ஆதித்திராவிடர்களுக்குள்ள அடிப்படைக் குறையை நீக்கப் பாடுபடுவதில்லை. மனிதனுக்கு மனிதன் பேதமில்லை என்ற சூழ்நிலை உண்டாக்க எந்த சங்கமும், போர்டும் பாடுபடுவதில்லை. பணக்கார விட்டுப் பெண்மணிகளுக்கும், பத்திரிவேஷம் போடும் உயர்ஜாதியினருக்கும் ஒரு திரையாக அமர்ந்தன இந்த சங்கங்கள். என்றைக்காவது ஒரு நாள், ஏதாவது ஒரு சேரியில் குழந்தைகளுக்கு தலைவாரிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று பல அரசியல் தலைவர்கள் நினைப்பதும், அந்த வேலை செய்வதற்கு அழகு மங்கையர் வருவதும் நாட்டிலே தினம் செய்யப்படும் 'சீர்திருத்த' வேலையாக இருக்கிறது!

இந்தமாதிரி கொடுமையில் ஓரிருவர், சில நாட்களாக வைக்கப்பட்டிருந்தால், அதை 'அநீதி' எனலாம். ஆனால் இப்படி, கோடிக்கணக்கானவர் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டு, ஓரிரு நூற்றுண்டுகள் அல்ல, ஆண்டாண்டு காலமாக, பரம்பரை பரம்பரையாக கொடுமைப்படுத்தப்பட்டால் அது அநீதி என்று கூறுவது மாத்திரம் போதாது. அதைவிடக் கொஞ்சம் மேலானது, இது. இதுதான் நமது நாட்டின் வாழ்க்கை நிலை. காட்டிலே சிங்கத்தைக் கண்டு ஓநாய் அஞ்சுவதும், ஓநாயைக் கண்டு ஆடு பயப்படுவதும் காட்டின் வாழ்க்கைநிலை. அதுபோலே இன்றைய நாட்டின் வாழ்க்கை நிலை உயர் ஜாதியான் கீழ்ஜாதியானைக் கொடுமைப் படுத்துவதுதான். அதற்கு ஏற்ற வண்ணம் மனிதன் தன்னை மாற்றிக்கொள்கிறுன். கீழ் ஜாதியில் பிறந்தோம் — என்ற காரணத்தாலே, அவனை அறியாமலே அவனுக்கு தாழ்வு மனப்பான்மை'வந்துவிடுகிறது. மேல்ஜாதியில் பிறந்துவிட்டோம் என்ற ஒரு காரணத்தாலே முழு ஆதிபத்திய எண்ணத்தோடு பேசுகின்றனர் மற்றவர் மற்றவர். இந்த சமுதாய ஏற்றத்தாழ்வுகளை எடுத்து விளக்கினுல், அவர்கள் "சுயமக்கள்" "கழகத்தினர்" "புரட்சி வாதிகள்" "கம்யூனிசம் பேசுபவர்கள்" என்று பல சொற்களால் பயத்தோடு பேசப்பட்டு, நாட்டிலே தவருக அறிமுகப்படுத்தப்படுகின்றனர். ஒன்றே குலம் என்ற தத்துவம் பேசினுலே, அத

ளுல் தங்களுடைய உல்லாச வாழ்க்கை பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகின்றனர், உயர் வகுப்பினர். தங்களுக்கு கிடைக்கும் அபரிமித லாபம் பாதிக்கப்படுமோ என்று பயப்படுகின்றனர் முதலாளிமார்கள். பழம் பெருமையைக் கூறிப் பதவிக்கு வந்தவர்களுக்கு தாங்கள் ஏறியசிம்மாசனம் நிலைக்காதோ என்ற பயம் வந்துவிடுகிறது. ஆகவே நாட்டிலே சீர்திருத்தம் பேசும் நல்லமுத்துக்கள், எந்த நேரத்திலும், எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. பொய்க் குற்றங்களுக்குப் பதில் கூறவேண்டியிருக்கிறது.

சீர்திருத்தவாதிகள் நாட்டிலே படும் அவஸ்தையை நான் இங்கு அதிகம் விளக்கப் போவதில்லை. இங்கு நாம்தெரிந்து கொள்ளவேண்டியதெல்லாம், அவர்கள் சமுதாயத்தை வளர்க்கத்தான் பாடுபடுகின்றனரே தவிர, அழிக்க அல்ல, நாட்டிலே ஒன்றுபட்டு, உற்சாகத்தோடு வாழும் ஒரே குலத்தை உற்பத்தி செய்யத்தான் அவர்கள்பாடுபடுகின்றனரே தவிர, எந்தத் தனிப்பட்ட மனிதனையும் அழிப்பதால், எந்த மாறுதலையும் ஏற்படுத்தி விடலாம் என்று அவ்வளவு சுலபமாக தங்களைத் தாங்களே ஏமாற்றி வாழும் நிலையில் இல்லை. தலைமுறை, தலைமுறையாக வளர்க்கப்பட்டு வரும் இந்த அடிமை முறைகளைக் களைந்து எறிய அவர்களால் ஆன முயற்சியைச் செய்கின்றனர். பலன் கூட எதிர்பார்க்காமல் செய்கின்றனர். இருந்தும் நமது மேட்டுக்குடியினர் அவர்களை 'கொலைகாரர்கள்', 'குண்டர்கள்' என்றெல்லாம் ஊரில் தப்புப்பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

சமுதாயம் ஒன்றுபடவேண்டுமென்ருல், 'மதத் துரோகி' என்று தூற்றப்படுகின்றனர்.

மேல்ஜாதியாளின் அக்கிரமத்தை எடுத்துக் கூறினுல், 'வகுப்புவாதி' என்ற ஏசலுக்கு ஆளாகின்றனர்.

ஆனுல் எந்தப்பழிச் சொல்லும் அவர்களுடைய உற்சாகத்தைக் கெடுப்பதில்லை.

அறியாமையும், ஆணவமும் கொண்ட மக்களிடையே புகுந்து வேலைசெய்யும்போது, புகழ்மாலையா கிடைக்கும்? கல்லடியும் சொல்லடியும், நித்தியபூஜைகளாகத்தானிருக்கும். பாலைவனத்தில் புயற்காற்றையும் கடும் வெயிலையும் கவனியாது, சோலையை நோக்கிச் செல்லும் ஒட்டகம் போல, ஊருக்கு உழைக்கப் புறப்பட்டோம்: உலுத்தர்களின் உறுமல்களுக்கு அஞ்சோம் என்று தாங்கள் ஏற்றுக்கொண்ட பெரும் பணியைக் கருத்தோடு செய்கின்றனர், தன்மான இயக்கத்தோழர்கள். அவர்களை இழிவாக்கி, அவர்களுடைய நிழலில் ஆறுமுகத்தைக் குற்றம் சாட்டப்பார்க்கிருர் சர்க்கார் வக்கீல். ஆனுல் ஆறுமுகத்தின் வழக்கு வேறு கோணத்திலிருந்து ஆராயப்படவேண்டியது.

நீதிபதியவர்களே! மனிதனுடைய எந்தப் பழக்க வழக்கமும் அவன் வாழச்சம்பாதிக்கும் முறைப்படிதான் அமைகிறது என்று உங்களுக்கு நன்ருகத் தெரியும். ஆதிகாலத்திலிருந்தே, மாற்ருரின் நிலத்தில் கூலிவேலை செய்து அவனுக்கு அடிமையாக வாழ்ந்து வந்த இந்த ஆதித்திராவிடர்களுக்கு மனித சமுதாயமே ஒரு சிறையாகத்தானே தோன்றியிருக்க முடியும்.

வாழ்க்கை முழுவதும் சிறை என்று தெரிந்த பின், கைதி என்ன செய்வான்?

அதைப்போலத்தான், தங்களுக்கு கிடைத்தது அடிமை வாழ்க்கை என்றும் மாற்ற முடியாததுஎன்றும் தெரிந்தவுடன்,அதை அப்படியே ஏற்றுக்கொண்டனர், இந்த சேரிவாழ்வோர். மேட்டுக்குடியினருக்கு தங்கள் குடும்பத்தோடு ஊழியம் செய்தனர்; தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்தனர். இவைகளுக்கு மேலாகப் பயந்தனர். தாங்கள் செய்யும் எந்தச் சிறு தவறையும் மாளிகைவாசிகள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்ற பயம் அவர்கள் வாழ்க்கையோடு ஒட்டியே போய்விட்டது. ஆம்! பயம்! எடுத்ததற்கெல்லாம் பயம் தான் அவர்களை விரட்டியது. அந்த பயம் நான் விளக்கியதுபோல நம்முடைய சமுதாய அமைப்பு, ஏற்றத்தாழ்வான நாகரீகம், அறியாமை, கல்வி வாசனையற்ற நிலை இவைகளால் ஏற்பட்டது.

இந்த அடிப்படையில் ஆறுமுகத்தின் வாழ்க்கையைக் கொஞ்சம் ஆராயுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை ஆறுமுகத்தின் மனதில் எப்பொழுதும் 'பயம்' நிறைந்தே நின்றது. எந்தக் காரியம் செய்யும் போதும், தான் ஒரு 'தீண்டப்படாதவன்' என்ற எண்ணம் இருந்து கொண்டே இருந்தது — இருக்கிறது.

சேரியிலே அவன் எந்தவிதமாகவும் பண்படுத்தப்படாமல், முழுப் பயத்தோடும், தாழ்வு மனப்பான்மையோடும் வளர்க்கப்பட்டிருக்கிருன். வறுமையோடு போராடிக்கொண்டு அறியாமையால் ஏற்படும் அத்தனை தவறு வழிகளுக்கும் விலகி வாலிபர்கள் வாழ்வதே, உத்தமநாதபுரத்தில் அதிசயம். ஆறுமுகம் எப்படியோ அந்தத்தவறு வழிகளில் செல்லாமல்தானே உழைத்துச் சம்பாதிக்கவேண்டுமென்ற மேலான எண்ணத்தில் உத்தமநாதர் மாளிகையில் வேலை பார்க்க வந்தான். பாபம்! அவனுக்கேற்பட்ட சந்தர்ப்பக்கோளாறு. வந்த அன்றே செத்துப்போன தன் முதலாளியைக் காணவேண்டியிருந்தது. உத்தமநாதரை ஆறுமுகம் தான் கொலைசெய்தாஞ இல்லையா என்பதை நாம் விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. காரணம் உத்தமநாதரைக் கொலை செய்ததாக அவனே ஒத்துக்கொண்டிருக்கிருன்.

கொலை செய்யப்பட்ட உத்தமநாதரைப் புதைப்பானேன்?

புதைத்துவிட்டு, நல்லமுத்துவின்மீது பழி சுமத்துவானேன்?

உத்தமநாதர் உடல் கண்டுபிடிக்கப்பட்டவுடன் ஓடுவானேன்?

பின், அவன் உயிருக்கு உயிராக காதலித்த பொன்னியைக் கொலை செய்வானேன்?

எல்லாம் பயம்! ஆம், தான் உயிர் வாழ வேண்டுமென்ற ஆசையில் ஏற்பட்ட பயம்தான்!

ஆறுமுகமே படித்து, நாகரீக வளர்ச்சி பெற்ற வாலிபஞக இருந்திருந்தால் இந்தக் காரியங்கள் எதையும் செய்திருக்க மாட்டான் என்பதை நீங்களே ஒத்துக்கொள்வீர்கள்.

ஆறுமுகம் நமது உயர் வகுப்பில் பிறந்திருந்தால், நிச்சயமாகத் தன்னுடைய குறைகளை குற்றங்களுக்கு விளக்கம் கூற. சட்டமன்றத்தை நாடி இருப்பான். எந்த நேரத்திலும், நீதியைத் துணைக்கு அழைத்திருப்பான். ஆனுல், பாபம், அவன் ஒரு சேரி வாழ்வோன். சேரி வாழ்வோர்களுக்கு நாம் பரந்த அறிவைப் பெறும் சந்தர்ப்பத்தைக் கொடுக்கவில்லை. இருந்தும், சட்

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 5—12—54 [ஞாயிறு

# அந்தக் கண்ணியம்!

போற்றியோர் பலர்! புகழ் மாலை சூட்டியோர் ஏராளம்!! அரியணை அரசி வாழ்த்துகிறார்—அரசியல் அறிஞர்கள் பாராட்டுகின்றனர்—மக்களிடம் வாழ்க முழக்கம் வானை எட்டுகிறது—புகழைத் தீட்டாத ஏடுகள் இல்லை—அமெரிக்கா 'ஆருயிர் தலைவா', என அழைக்கிறது —பிரான்ஸ் 'பெருமைக் குரியவரே!', என்று கூறுகிறது—அரியதோர் நாவுக்கரசர் என்கின்றனர் ஆங்கிலமேதைகள்—சிறந்த பேனாமன்னர் எனஇலக்கிய உலகம் கொண்டாடுகிறது—''அப்போதுகூடஎனக்கு அவ்வளவு ஆனந்தம் ஏற்படவில்லை! ஆனால், இப்போது இங்கே நான்கண்டகாட்சி என் இதயத்தை உருகச்செய்துவிட்டது. என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத தினம், இது. நமது தேசத்தின் சரித்திரம் சந்தித்திருக்கும் வியப்புக்குரிய நிகழ்ச்சிகளின் சிகரம் இன்றையதினம் நடைபெற்றது. இதனைக்கேள்விப்படும் உலகமே, ஆச்சரியப்படும்! ஒரு அரசியல் வாதிக்கா இவ்வளவு அபாரமான வரவேற்பு! என ஆச்சரியப்படும்''—என்று மனம் உருகினாராம். குரல் தழதழத்ததாம், துளிர்த்ததாம் ஆனந்தக் கண்ணீர். சபையைவிட்டுவெளியேறும் போது பிறரை வணங்கி அவர் விடைபெற்ற காட்சி, சிந்தையைக் குலுக்கிற்றும்!! அண்மையில் 80 வயதை எட்டிப் பிடித்த பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலுக்கு, பார்லிமெண்டில் நடைபெற்ற பாராட்டுரை பற்றி, பிரிட்டிஷ் ஏடுகள் தீட்டுகின்றன, இவ்விதம். சர்ச்சில்! சாதாரண ஆளல்ல — அலைகடல் துரும்பென அல்லாடிய பிரிட்டனை சிம்மக்குரல் ஒன்றுலேயே ஜெயக்கொடி நாட்டச் செய்தார்,. கடந்த போரில் — அவரது திறமை பற்றிப் பாராட்டாதோர் கிடையாது—தொண்டுகிழம்! எனினும், கிண்டல் தொனிக்கும் அவர் குரல், கீதமாக இனிக்கிறது இங்கிலாந்து மக்களுக்கு!! அவருக்கு, பிறந்த நாளையொட்டி இவ்வளவு புகழ்மாலைகளும், பாராட்டுரைகளும் கிடைத்ததில் வியப்பில்லை—ஆனால், ''அவைகளில் பெருத ஆனந்தத்தை, இப்போதுதான் பெற்றேன்! அதுவும் இங்குதான் பெற்றேன்!'' என பார்லிமெண்டிலே அவர் கூறியதேன்! பார்லிமெண்டு உறுப்பினர்களிலே, புலர், அவரது தொண்டர்கள்—அனுதினமும் அவருக்குப் பராக்குக் கூறுபவர்கள். எனவே, அவர்கள் வீசிய புகழுரை, அவ்வளவு பூரிப்பை வழங்கியிராது! அவருக்கு, எத்தனையெத்தனையோ விதமான பரிசுகள் குவிந்திருக்கும் — எனினும், பார்லிமெண்டிலே கொடுக்கப்பட்ட பரிசும், கூறப்பட்ட சொற்களுமே, தன் மனதை உருகச் செய்துவிட்டதென உரைப்பானேன்? அதிலும், அங்கே, உலகம் வியக்கக்கூடிய ஒரு பரிசும் அல்ல—அளிக்கப்பட்டது. ஒரு ஓவியம்! ஒப்பற்ற கற்பனைக் களஞ்சியமல்ல—அவரது, உருவம், வரையப்பட்ட ஓவியம். அந்த ஓவியமே, தான் பெற்ற பேறு என்கிறார் சர்ச்சில்! பிறருக்குக் கிடைக்காத பேறு என வர்ணிக்கிறார், ஆனந்தத்துடன்!! அந்த ஓவியத்தை வழங்கியவர் தந்த வாழ்த்துரையும், சர்ச்சிலைப் பற்றிப் பலர் போற்றியது போல மேதையே! அறிவே! புகழே! என்னும் அர்ச்சனைகள் அல்ல; சிறிது காரமும் கலந்தது—'' சர்ச்சில் அவர்களே! உங்கள் வாழ்நாளில் நிலையான சில காரியங்களைச் செய்து விட்டுப்போக வேண்டும்''—என்று குறிப்பிடப்பட்டது. எனினும், எலிசபெத் அரசியலாரின் வாழ்த்தும், அரசியல் தோழர்களின் 'வாழ்க' முழக்கமும், அளிக்காத இன்பத்தைப் பெற்றன்! இத்தகைய இன்பத்தைப் பெற்றார்,எவரே!எனப்பூரித்திருக்கிறார். உண்மைதான்—சர்ச்சிலுக்குக் கிடைத்த இந்த 'பாக்கியம்' அரசியல் வாழ்விலீடுபடும் பலருக்குக் கிடைப்பதில்லை ஏனெனில், புகழுரையும் பரிசும், தந்தவர் சர்ச்சிலின் சகா அல்ல—அப்படியிருந்தால் ஆயிரத்தோடு இதுவுமொன்று என்று கருதப்பட்டிருக்கும். அவரும், வழக்கம்போல, 'நன்றி' செலுத்தி விட்டுப் போயிருப்பார். தந்தவர், அட்லி! அனுதினமும் பார்லிமெண்டில் சர்ச்சிலையும், அவரது சர்க்காரையும் காரசாரமாகக் கண்டிப்பவர்! எதிர்க்கட்சித்தலைவர்!! அவருடைய புகழுரையையும் பரிசையும், எதிர்க்கட்சிக்காரர்கள் அனைவரும் எழுந்து நின்று காட்டிய மரியாதையையும் கண்டே—கேலியும் கிண்டலும் வீசும், அவர் குரல் தடித்திருக்கிறது! மாற்றாரை மருட்டும், விழிகளிலே, ஆனந்தக்கண்ணீர் அரும்பியிருக்கிறது! ஆனந்தம், பெற்றேன்—அகில உலகிலும் நடவாத நிகழ்ச்சியைக் கண்டேன்—அட்லி என்னை வாழ்த்தினார், என்று புளகாங்கிதமடைந்து, அந்தப் பூரிப்பிலே தொண்டுகிழமான அவர், குனிந்து வணங்கியவாறு, சபையை விட்டுச் சென்றிருக்கிறார்.

*

சர்ச்சிலின் கொள்கையும், அவர் தாங்கியிருக்கும் பிரபுத்துவப்போக்கும், இந்திய சுதந்திரத்துக்குப் போட்ட முட்டுக்கட்டுகளையும் நாம் அறிவோம். ஆயினும், அவர் இப்போது காட்டியிருக்கிற கண்ணியம் இருக்கிறதே—அதனை, அறியும்போது உண்மையிலேயே, உள்ளம் வியக்கிறோம். ஒரு நிமிடம்! சில வார்த்தைகள்! சொல்லியிருக்கலாம், அவர்—''யார் இந்த அட்லீ? இந்த ஆளுடைய புகழுரை தான் என்னை வாழ்விக்கப்போகிறதோ அகில உலகும் என்னை அறியும்—எனக்கேன், இந்தப்பரிசு. கேட்டால் பொன் சட்டம் போட்டு, விதவித வண்ணம் குழைத்து, வியக்கக்கூடிய ஓவியம்-ஒன்றல்ல-ஓராயிரம் கிடைக்கும். இது ஏன்?'' என்று கூறியிருக்கலாம். இதனால், அவர் பெற்றிருக்கிற கீர்த்தி முடிக்கு, பங்கம் வராது ''அட்லீ தலையிலடித்தார்—சர்ச்சில் தந்தபுத்தி—வேண்டும் இந்த அட்லிக்கு'' என்று விதவிதமான வகைகளில் செய்திகளை வெளியிட்டு பூரிப்படையும் பிரபுக்களும் உண்டு. ஆயினும், சர்ச்சில் அப்படிச் செய்யவில்லை. அகம் உருகியிருக்கிறார், முகம் மலராயிருக்கிறது,, ஆனந்தம், விழிகளிலும், நடையிலும் அலைமோதச் செய்திருக்கிறது-பெறற்கரிய பேறு,—என வியந்திருக்கிறார். இந்தக்கண்ணியம், இலேசானதல்ல,, காந்தியார் சிலையைத் திறக்கச் சென்றால் கதர்கொடி ஏந்தி கலவரம் செய்வோம் என எச்சரிப்போரிடையில் உள்ள நாம், அந்தக்காட்சியை எண்ணிடும்போது, உண்மையிலேயே உவகை கொள்கிறோம். சொந்தக் கட்சியினர் சூட்டும் ரோஜா மாலைகளை விட—மாற்றார் உவந்தளிக்கும், சிறு செண்டு, அரசியல் வாழ்வினருக்கு, கோடி பெறும். அதனாலேயே, 'பேறு பெற்றேன்', என்கிறார் — அந்தக் கண்ணியம், மிகவும் பாராட்டக்கூடியது—அதே நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்—ஏற்காத கொள்கைகளைக்கொண்ட ஆட்சியின் முதல்வர்—ஆயினும் அவரால் நாட்டுக்கு வந்த ஆபத்துகள் களையப்பட்டிருக்கின்றன—அவருக்கு வயது எண்பதாகிறது—அவருடைய சேவையை நாமும் அங்கீகரிக்க வேண்டும் என்ற பெருந்தன்மையைப் பெற்று, செயலாக்கினாரே, அட்லீ, அந்தக் கண்ணியம் வியப்புக்குரிய ஒன்று. பலர் பாராட்டும் போது, அட்லி பேசாதிருந்திருந்தால், யாரும் அதைப்பற்றி எதுவும் எண்ணியிரார். ஆனால், அட்லி, வாழ்த்தினார்—காரமும் கலந்துதான்-பரிசும் வழங்கினார். இந்தக் காட்சி சர்ச்சில் சொன்னது போல, சாதாரண நிகழ்ச்சியல்ல, சரிதக் குறிப்பேயாகும்.

*

எதிர்க்கட்சிகள் என்றால் அவர்களை ஏசுவதும், அடிக்கப்பாய்வதுமே அரசியல் நாகரீகம்—எனும் அவலம், இந்த நாட்டின் தொத்துவியாதியாகும். துரோகிகள்—சூதர்கள் — சண்டாளர்கள்—கொலைகாரர்கள்— விரோதிகள்-விரும்பக்கூடாத கண்ணீர்த்துளிகள்-

என்று, ஏதோ ஒன்றை மனதில் வைத்து, கொடுமை புரியத்தாவும் குறுமதியினர் பலர் உண்டு இங்கே. எதிர்க்கட்சியென்றால், அவர்களது கணக்கைத் தீர்ப்போம்—என்னைப்புகழ்கிறார்களா? புகழ்வதற்குயாரிருக்கிறார்கள் அவர்களுக்கு; அதனால்தான்! —புகழவேண்டுமென்று, நானா கேட்டேன்—வேலையில்லாதவர்கள்—ஏதோ, சதி இருக்கும்—இப்படி கர்ஜிப்போரும் உண்டு. இந்த அரசியல் அநாகரீகத்தை எப்போதுமே கண்டித்துவருவோர், நாம். அரசியல்வானில் எதிர்த்திசையிலிருந்தாலும், மாற்றுக்கட்சியினர் செய்த நன்மைகளைப் பாராட்டத் தயங்கியதில்லை—அவர்கள் செய்த குறைகளை, அதற்காக, அனுமதிப்பதுமில்லை — ஆச்சாரியாராயிருந்தாலும், காமராஜராயிருந்தாலும், பண்டிதராயிருந்தாலும், கிருபளானியாயிருந்தாலும், இன்றுவரை இதுதான் நமது கொள்கை. இதனால்தான், தி. மு. க தோன்றியதும் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு எனும் முச்சொல்லையும் முழக்கினோம். அதேபாதையில் நடந்துசெல்லுமாறும் கழகவீரர்களை வேண்டியிருக்கிறோம். இந்தப்போக்கு மலர்ந்தால்தான், நாடு, வாழும்—மனிதத்தன்மை நிலைக்கும். எனவேதான், அட்லியின் பெருந்தன்மையும், சர்ச்சில் காட்டிய கண்ணியமும் காணமகிழ்கிறோம்! அது மட்டுமல்ல, வேறோர் வகையிலும், தொண்டு கிழமான சர்ச்சில் தன்னுடைய கண்ணியத்தைக்காட்டிக்கொண்டிருக்கிறார். அகில உலகத்திலும் ஜோதி ஜொலிப்பதாகச்சொல்லுகின்றனரே, அந்தப்பண்டிதர், அவசியம் உணரவேண்டிய கண்ணியம்—மிரட்டி உருட்டி வாழ நினைக்கின்றாரே ஆச்சாரியார் அவர் உணரவேண்டிய கண்ணியம்—அரசியல்வானில்ஏசலையும் பூசலையும் சிருஷ்டிக்கின்றனரே, அவர்கள் உணரவேண்டிய கண்ணியம்—தான் வைத்ததே சட்டம், இட்டதே கட்டளை என மொழிக்கின்றனரே, அவர்கள் அவசியம் உணரவேண்டியகண்ணியம்—நான்சென்ஸ், காட்டுமிராண்டி எனும் சொற்களை வீசி அதனால் புண்பட்ட சமூகம் புலிபோல் சீறியிருக்கிறதெனத் தெரிந்தும்சிங்கம்போல்பவனிவர நினைக்கின்றாேர், உணரவேண்டிய கண்ணியம்-அதனைக்காட்டியிருக்கிறார் சர்ச்சில். அண்மையில் அவருடைய தொகுதியில் ஒரு கூட்டத்தில் பேசியபோது உலகம் திடுக்கிடக்கூடிய ஒரு செய்தியை வெளியிட்டார்—'கடந்த உலகப்போரின் போது நாஜிகள்வசம் சிக்கிய ஆயுதங்கள், பிறகு ரஷ்யரைத் தாக்கத் தேவைப்படக்கூடும் என்றும் அவைகளைச் சேகரித்து வைக்கும்படி அப்போதிருந்த தளபதி மாண்ட்கோமெரிக்குத் தந்தி கொடுத்ததாகவும். செய்தி, பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று நாட்டில். சதிநினைவோடுதான் சர்ச்சில் கூடிக்குலவினாரா? ரஷ்யாவுடன்?—என்ற கேள்வி கிளம்பிற்று. அட்லி ,இதற்காகப் பார்லிமெண்டில் ஒரு கண்டனம் கொணரப் போவதாக அறிவித்திருந்தார். இவ்வளவு அமர்க்களம், எங்கும் கண்டனக் குரல், சர்ச்சில் சாதாரணமானவரல்ல அஞ்சாநெஞ்சர்; ஆற்றல் வீரர்; கிண்டல் பெட்டகம்; பெரிய ராஜதந்திரி; அதைவிட வாழ்வில்பெரும்பாகத்தைக் கழித்துவிட்டு, கடைசிப்பருவத்திலிருப்பவர். அவர், என்ன செய்தார் தெரியுமா? டிசம்பர்முதல்தேதி,பார்லிமெண்டிலே, தான் அப்படித் தெரிவித்ததற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். ஏராளமான உறுப்பினர்களுக்கு முன்னிலையில் தான் அப்படிச் சொன்னது தவறென ஒப்புக் கொண்டிருக்கிறார்!

*நான் உண்மையிலேயே வருந்துகிறேன்.*

*நான் அப்படி ஒரு தந்தி கொடுத்ததாக நினைத்துக் கொண்டு பேசிவிட்டேன்.*

*பேசுமுன், பேசப்போவதைநினைத்துப்பார்க்க வேண்டுமென்று பிறருக்குப் போதிப்பது வழக்கம்.*

*நானே அதைக் கடைப்பிடிக்காமல்போனது குறித்து மிகவும் வருந்துகிறேன்.*

*என்னுடைய தவறை "மான்செஸ்டர் கார்டியன்" ஏடு, இடித்துக்காட்டியதை ஏற்கிறேன்.*

இவ்வாறுகக்கூறியிருக்கிறார். வருத்தம் தெரிவித்திருக்கிறார். இந்தக் கண்ணியமே, நமது சிந்தையை மிக மிகக் கவர்கிறது. சர்ச்சில், பெரிய வாசாலகர்—வார்த்தைகளை, வாள்வீச்சாக்கி, எதிரிக் கோட்டைகளைப் பொடிபொடியாக்கும் ஆற்றல் பெற்றவர். சிறு குட்டிக்கதை. ஒரு நகைச்சுவை கிண்டல்,, அதோடு, முடிக்க முயன்றிருக்கலாம், பிரச்னையை. பெரியவர்தான் ஆனால், அதனை மறைக்க முயலாது, தவறென உணர்ந்து, வருத்தம் தெரிவித்திருக்கிறாரே-அந்தக் கண்ணியம், காண்பதற்கு அருமை அங்குதான் இருக்கிறது. அரசியல் நெறி. மக்களுக்காகவே அரசியல் வாழ்வு எனும் அன்பு நெறி. சர்ச்சில் அங்கேஅப்படி. இங்கோ, எப்படியிருக்கின்றனர், நமது ஆளவந்தார்கள்? தூற்றுகின்றனர் — பழி சுமத்துகின்றனர்—ஏசுகின்றனர்—தவறென்று சொன்னால் 'என்ன செய்யமுடியும்?' என்கின்றனர்—சட்ட சபையின் முடிவையே அலட்சியம் செய்கின்றனர்—ஜன நாயகக்குரலையே நசுக்குகின்றனர். சர்ச்சில், நாட்டை மதிக்கிறார். மனதார வருத்தம் தெரிவிக்கிறார். இவர்கள் தங்கள் மதிப்பை நினைக்கின்றனர். அதனால், திமிர் கொண்டோராகத் தென்படுகின்றனர். அவர்கள்எந்தக்கூடாரத்திலிருந்தாலும்இவ்விதம்நாட்டைமதிக்கும் பண்பும், அதற்கு இழுக்குஏற்படாதவாறு செய்யும் கண்ணியமும் ஏற்பட வேண்டும். பொதுவாழ்வினருக்கு இந்தக் கண்ணியத்தையும், காட்டியிருக்கிறார், சர்ச்சில். அதனால், பெரிதும் மகிழ்கிறோம்—அதை இங்குள்ளோருக்கும் சுட்டிக் காட்டுகிறோம்.

*

*எதிரி*—எனினும் அவரால் ஏற்பட்ட நன்மைகளை, அங்கீகரிக்கிறது, எதிர்க்கட்சி.

*மாற்றுக்கட்சி*—எனினும் அது தரும் அன்பளிப்பு கண்டு, ஆனந்தத்துடன், ஏந்துகிறார், கையில்.

*செய்தது தவறு*—மிகப்பெரியவர் எனினும், மனதாரவருத்தம் தெரிவிக்கிறார்.

இப்படிப்பட்ட கண்ணியம், பொது வாழ்வில் ஏற்படவேண்டும். அது பொதுவுடைமைச் சோலையானாலும், தேசீயக் காடானாலும், எந்தக்கட்சியானாலும், *மனிதர்களை* மதிக்கும் பண்பும், அவர்களால் நாட்டுக்கேற்பட்ட *நன்மைகளை* பாராட்டும் பக்குவமும், தவறு செய்ததை *மனதார* ஒப்பி வருந்தும் தன்மையும். உருவாக வேண்டும்—இங்கு. ஆனால், இந்த நற்பண்புகள், குதிரைக்கொம்பாயிருக்கின்றன, இங்கே! கோலேந்தியவர்கள், பிற கட்சியினரை மதிக்கும் பண்பையே மறந்துவிட்டார்கள் — எதிர்க்கட்சியாயிருக்கும் இரண்டொன்றும் எதெற்கெடுத்தாலும் எதிர்ப்பதே வேலையென உள்ளது — தவறுசெய்யும் அமைச்சர்களும் அத் தவறை உணர்ந்து வருந்துவது கிடையாது. எனினும், ஜனநாயகம்—ஜனயுகம்—புது வாழ்வு — என்றெல்லாம் பேசத் தவறுவதில்லை. அரசியல் — மனித வாழ்வைச் செப்பனிடவேயொழிய, அநாகரீகத்தை வளர்க்க, அல்ல. அரசியல்-மக்கள் சேவைக்காகவே ஒழிய, மனித உடலைப் பெருக்கிக்கொள்ள அல்ல. இதனை, தனக்களிக்கப்பட்ட பாராட்டுக்குப் பதிலளித்த சர்ச்சிலே, இரண்டு வரியில் தெரிவித்திருக்கிறார்-"*பேனுவாலும் நாக்காலும் சம்பாதிப்பவன்—நான்*", என்று. அரசியலைச் சொந்த லாபத்துக்குத்தான் என்றும் பயன்படுத்திக் கொண்டதில்லையென்றும், ஆகவே, அட்லி கூறியதுபோல, தன் வாழ்நாளில் சில *நிலையான* காரியங்களைச் செய்து விட்டுப்போகவே ஆசைப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார். மீண்டும் கவனமூட்டுகிறோம் — அவர், வழி வேறாயிருக்கலாம், அந்த வழி முரணாகக்கூட இருக்கலாம். ஆனால், நாட்டுக்கு நிலையான காரியங்களைச் செய்துபோக வேண்டுமென்ற உண்மை உள்ளம் இருக்கிறதே—அதை, எவரும் மதிக்கத்தான்வேண்டும். அத்தகைய இதயங்கள்—பாசிஸ்ட் கூடாரமான காங்கிரசில் தென்பட்டாலும்—நாடு பூஞ்சோலையாகவும் கூடும். யார் செய்தாலென்ன—நாடு, வாழ்ந்தால், சரி அந்தப் பெருந்தன்மை ஏற்படுமா—இங்குள்ள பெரியவர்களுக்கு! கண்ணியம் மலருமா! அறிகுறிகூட இல்லையே!

★

தொடர் சித்திரம்

# கடிகாரம்

4

[அண்ணல்]

"உமாதேவியிடம் பரமசிவம் சொல்ல, உமை நந்திக்குச்சொல்ல, நந்தி நாரதருக்குத் தெரிவிக்க, நாரதர் கின்னரரிடம் கூற, கின்னரர் கிருஷ்ணமூர்த்தி அய்யரின் கனவில்வந்து சொல்ல, கிருஷ்ணமூர்த்தி அய்யர் என்னிடம் சொல்ல, நான் உங்களுக்குத் தெரிவிக்கும் விஷயம் அல்ல இது! எங்கள் சிந்தனையில் தென்பட்டது—அதைத் தெரிவிக்கிறேம்! 'நம்பினல் மோட்சம் — நம்பாவிட்டால் நரகம்' என்றும் கூறவில்லை. சிந்தித்தால் புதுவாழ்வு பெறலாம்" என்று எங்களூர் பொதுக் கூட்டமொன்றில் அண்ணாதாசன் என்பார், ஒருமுறை பேசியது, ஹெட்கான்ஸ்டேபிள் கூறியதைக் கேட்டதும் எனக்கு நினைவுக்கு வந்தது. ஏனிப்படி, படித்தும் கேட்டதும் எனக்கு அடிக்கடி ஞாபகம் வருகிறது என்று கேட்கிறீர்களா? அதுதான் என்னிடமிருக்கிற பெரிய நோய்! என்னைப்போல இவ்வித நோய்க்கு ஆளானேர் ஏராளம் உண்டு! "லக்ஸ்டாய்லெட் சோப்பை லலிதா உபயோகிக்கிறர்" "எமன் மார்க் பல்பொடியே ஙிங்காங்விரும்புவது" என்றெல்லாம் விளம்பரம் செய்கிறர்களே—அது எதற்காக? நமக்குத் தெரிந்த ஒரு பிரபலமானவரின் பெயர்மூலம், விளம்பரம் செய்கிறர்கள் அப்படி! அது போன்றதுதான் இந்தநோய். 'லக்ஸ்' சோப்பைப்பற்றி அறியாத விவசாயிவீரருக்கும் பல்பொடி தேவையில்லா பக்கிரிக்கும், இந்த விளம்பரம் தேவையில்லை—அவன் கண்ணில் பட்டாலும் ஏதோ ஒன்று என்று போய்விடுவான். ஆனல் அந்தப் பொருள்களை உபயோகிப்போர்தானே சிரத்தையோடு பார்க்கின்றனர்! நான், அந்த ரகம். படிப்புவாசனையற்றவனுகவும், உலக விஷயம் எதைப்பற்றியும் கவலைப்படாத கிராமவாசியாகவும் இல்லையே! இரண்டும்கெட்டானுன, மத்தியதர வர்க்கத்தில் அல்லவா இருக்கிறேன். இதுதானே உலகத்திலேயே, அல்லாடும் வர்க்கம். ஏடுகளைப் படித்துக்கொண்டு, அந்தக் கனவிலேயே உழன்றுகொண்டிருக்கும் வர்க்கம். ஆதலால் நல்ல விஷயங்களைப் படித்தாலும் கேட்டாலும், எப்போதும் என் நினைவிலிருக்கும்! உலகம் ஒரு சாகரமாம். அதனை அறிவதென்பது கடலைத் தாண்டுவது போலவாம்—அந்தச் சாதனை எம். ஏ., பி. ஏ. படித்தவர்களுக்குத்தான் முடியுமாம். நானே, இந்தப் பட்டங்களைப் பெருதவன். பட்டம் பெருமலே இவைகளைத் தெரிந்துகொள்ள முடியாதா? இப்படியோர், ஆசை. அதனல், உலக நிகழ்ச்சிகளை ஏந்திவரும் பத்திரிகைகளையும், எல்லாவிதமான நூல்களையும் படிப்பேன் — நினைவிலும் கொள்ளுவேன். இப்படிச் செய்ததால்தான் இந்தக் கடிகாரம் சம்பந்தமாகவும் இவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டேன். இன்றுஒரு பொதுஜனத்தொண்டனுமானேன். என் கதை, ஏன், உங்களுக்கு? அண்ணாதாசன் கூறியதுபோல, கடிகார விஷயம் வரதனிடமிருந்து வள்ளியிடம் செல்ல, வள்ளியிடமிருந்து மருத்துவரிடம் போய், மருத்துவரிடமிருந்து பைத்யத்திடம் சென்று, இப்போது சிங்கார மடத்துக்குச் சென்றிருக்கிறது!!

மாணிக்கம், ஆதாரத்தோடு, சொன்னர்—"சிங்காரத்துக்குரியது என்று எப்படி தெரிந்தது தெரியுமா? அந்தக் கடிகாரத்தின் ஒரு மூலையில். பொடி எழுத்தில், ஆங்கிலத்தில் "சிங்காரமடம்" என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. அதனலேயே சுலபமாகக் கண்டு பிடித்தோம். மாஜிஸ்டிரேட் உடல் நலம் பெற்று, கோர்ட்டுக்குள் வருவதற்குள், இது பற்றிய பூரா விபரங்களையும் சேகரிக்கவேண்டுமென்பது டி. எஸ். பி. உத்தரவு! சிறு திரட்டு! ஆனல் இந்தப் பத்திரிகைக்காரர்களால்—எங்கள் தலையே உருளுகிறது. சப்-இன்ஸ்பெக்டர் கூட, இது பற்றி விசாரிக்க, சிங்காரமடத்துக்குப் போயிருக்கிறர்," என்று தெரிவித்தார். எப்படி நம்பாமலிருக்க முடியும்? கடிகாரத்திலேயே பெயர் எழுதப்பட்டிருந்ததாமே!! மாணிக்கத்தின் உதவியால், மறுநாள், சிறைக்கு நானும் பைத்யமும் போனேம். வழியில், கடிகாரத்தைப் பற்றி, பைத்யத்தை விசாரிக்காமலா இருப்பேன்? கேட்டேன்! அவனே "பிறகு சொல்கிறேன்—முதலில் அவர்களைப்பார்த்து மன்னிப்புக் கேட்க வேண்டும்", என்று மறுத்துவிட்டான். அதனல், சிறை அதிகாரி அழைத்ததும், இருவரும் வேகமாகப்போனேம்! வரதனிடம், அழைத்துப் போயினர். என் கூடப் பைத்யமும் வருவதைக்கண்ட வரதன், திகைத்தது தெரிந்தது, எனக்கு. ஆனல், பைத்யம், அவனைப் பார்த்ததும் மிகவும் வருந்தி தன்னை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டான்! வரதனே, "ஜெயில், என்மாமியார் வீடு மாதிரிங்க. எனக்குஒண்ணும் மனக் கஷ்டமே இல்லே! ஆனா, அந்தப் பொண்ணையும் கொண்டுவந்து, பூட்டிவைச்சிருக்கிறதுதான் கஷ்டமாயிருக்கு. நிஜமாச்சொன்ன, வள்ளி, திருடிக்கொண்டாந்த கடிகாரமல்லங்க, அது. ரொம்பநாளா வைச்சிருந்தது! அதைக்கேட்டா கொடுக்காதுன்னுதான், அதுக்குத் தெரியாமெ நான் எடுத்துக் கொண்டு வந்தேன். வீணா, அகப்பட்டுக் கிட்டேன்!!", என்றுவருந்தினன். அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, வள்ளியை, வைத்திருந்த இடத்துக்கு வந்தோம்! வள்ளி—என்னைப்பார்த்ததும் கும்பிட்டாள்! பிறகு, என் கூடவந்திருக்கும் பைத்யத்தை வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்—பைத்யத்தைப்பற்றி யாரென்று சொன்னேன் — நான் சொல்வதைக் கூடக் கேட்காமல், அந்தப் பைத்யத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் வழிவதைக்கண்டேன்! திடீரென அலறினள், அவள்! "வந்தூட்டிங்களா?—வந்தூட்டிங்களா?", என்று கூவிக் கொண்டே, சிறைக்கம்பிகள் மூலம் கைகளைநீட்டினள். பின்னல் நின்றுகொண்டிருந்த பைத்யத்தைத் திரும்பிப் பார்த்தேன்! அவன் கீழே விழுந்து கிடந்தான்!!

(வளரும்)

---

## அனுதாபம்

கடந்த வாரம் பிறந்த தன்னுடைய முதல் குழந்தை இரண்டு தினங்களுக்கு முன் இறந்துவிட்டதாக இசை முரசு நாகூர் அனீபா அவர்கள் வேதனையோடு எழுதியிருப்பதைக் காண மிகவும் வருந்துகிறேம். தோழருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேம்.

7-ம் பக்க தொடர்ச்சி

டத்திலே எல்லா இனத்தாரையும் ஒரே நிலை அறிவுடையாராக மதித்து தண்டனைகள் வகுத்திருக்கிறோம். ஆகவேதான், இந்த நீதிமன்றம் ஏறி நான் கூறுகிறேன், சட்டத்திலும் புரட்சிகரமான மாறுதலை நாம் செய்யவேண்டுமென்று அவரவர்கள் நிலைமைக்கு ஏற்ற நீதியை வழங்கவேண்டுமென்று.

நீதிபதியவர்களே! இன்றைக்குக் குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் ஆறுமுகம் அங்கு வரக் காரணம், நாம்தான். ஆம்; இந்த ஏற்றத் தாழ்வான சமுதாயத்தை உண்டாக்கி அதிலே ஆறுமுகம் செல்ல வேண்டிய பாதையையும் நாமே செப்பனிட்டு வைத்திருக்கிறோம். அப்படி அவனுக்காக அமைக்கப்பட்ட பாதையிலே அவன் நடந்து வந்தான். அப்படி அந்த 'அமைந்த பாதை' அவனைத் தூக்குமேடை அருகே இன்று கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது. மற்றப்படி அவனாக நினைத்து, சிந்தித்து, பகுத்து ஆராய்ந்து தேடிக் கொண்ட வாழ்க்கை முடிவல்ல இது. பயந்து ஓடியவனைத் தேடிக் கொடுக்கப்பட்ட வாழ்க்கை முடிவு இது.

ஆகவேதான் மறுபடியும் கூறுகிறேன், ஆறுமுகம் செய்த குற்றங்களின் பெரும் அளவு பொறுப்பு நம்முடையது என்று. ஆனால், அதற்காக அவனை விடுவிக்க வேண்டுமென்று கூறுவதாக ஒரு கணமும் எண்ணிவிடாதீர்கள். தயவுசெய்து இவனுக்குத் தூக்குத் தண்டனை தராதீர்கள். கருணை கூர்ந்து ஆயுள் சிறை கொடுங்கள். இவனுக்கு ஆயுள் கொடுப்பதின் மூலம், மிகப் பெரிய மனிதா தர்மத்தை உணர்ந்தவர்களாவீர்கள். இரு கொலைகள் செய்தவன். ஆனாலும், எந்தவித அடிப்படைக் காரணமுமின்றி நமது சமுதாய அமைப்பினால் ஏற்பட்ட அறியாமையில் கொலைகள் செய்தவன். அவனை உற்பத்தி செய்த சமுதாயத்தின் புரையோடிப்போன பாகத்தை நாடறியச் செய்யுங்கள். அப்படிச் செய்ய முதல் கட்டம், ஆறுமுகத்திற்கு ஆயுள் சிறைத் தண்டனை கொடுப்பதுதான். அந்தச் சிறையிலே அவனுக்கு மனித சமுதாயத்தைப்பற்றிய முழு அறிவும் வளரும். அதே நேரத்தில் ஆறுமுகங்களைக் கொலை செய்தால்மாத்திரம் போதாது; அவர்கள் உற்பத்தியாகாதவாறு சமுதாயத்தைத் திருத்தியமைக்கவேண்டுமென்ற மனப்பான்மை வெளியுலகில் வளரும். பயத்தால் திண்டப்படாத சமூகம் வளருவதை ஒழித்து, அன்பால் ஒன்றுபட்டு உழைக்கும் மனித வர்க்கம் வளரும்.

இவைகளைச் செய்ய இந்த வழக்கோ, அல்லது இதில் ஆறுமுகம் ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால்மாத்திரமே போதுமென்றோ நான் கூறவில்லை. ஆனால், இது அந்த நல்ல காரியத்தைச் செய்ய ஆரம்பமாகட்டும்.

ஆம்! இந்த நாட்டின் வருங்காலத்தை நினைத்துக் கேட்டுக்கொள்கிறேன், ஆறுமுகத்திற்குச் சிறைத் தண்டனை கொடுங்கள்; தூக்குமேடை வேண்டாமென்று"

தன் ஆவேசமான பேச்சை முடித்துக்கொண்டு தன் இடம் ஏகினார், நெடுமாறன்.

அவருடைய கடைசி வார்த்தைகளின் எதிரொலி இன்னும் அந்த மண்டபம் பூராவும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அவருடைய பேச்சு, என்றுமில்லாதளவு ஆறுமுகத்தைக்கூட உற்சாகப்படுத்தியது. ஆனால், அடுத்த நிமிடமே நல்லமுத்து எதிர்பார்க்குமளவு, தன்னால் வளரமுடியுமா என்ற பயம் அவன் மனதில் தோன்றியது.

இதற்குள் நீதிபதி மேஜையைத் தட்டினார்.

"சர்க்கார் பதில் கூறலாம்!" என்றார்.

உடனே கண்ணாடியை மாட்டிக்கொண்டு எழுந்தார், வாளாடி கிருஷ்ணசாமி ஐயர். என்றைக்கும் இருப்பதைவிட மிகவும் உற்சாகமாகவே அன்று பேசினார் அவர்.

"நீதிபதியவர்களே! இதுவரையில் இல்லாத முறையிலே, காலையிலிருந்து இந்தநீதிமன்றத்திலேநீண்டதொரு பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தோம். மேடைப்பேச்சுகளில் வெளிவரவேண்டிய வாசகங்கள் பல இங்கே மாறி, மாறி எதிரொலித்துக் கொண்டிருந்தன. மேடைகளில் பேசினால் ஜனங்கள் கேட்கவருவதில்லை என்று இங்கு பேசிவிட்டாரோ, என்னவோ, எப்படியோ இருக்கட்டும். முதலில் ஒன்றை மாத்திரம் நன்கு ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்த இடத்திலே நாம் குற்றவாளியின் குற்றங்களை விசாரித்து, நீதி வழங்குகிறோம். ஆம்! சமுதாய சீர்திருத்த மேடையல்ல, இது! இருக்கின்ற சமுதாயக் கட்டுப்பாடுகளை உடைத்தெறியும் கொலைபாதகர்களைத் தண்டிக்கக்கூடியிருக்கிறோம் நாம். இந்த இடத்திலே, கொலை செய்தவனுக்கு சாதகபாதகமாக சாட்சிகள் விசாரிக்கலாம். சட்டநுணுக்கம் பேசி விடுதலை கோரலாம். வேறு கோர்ட்டு தீர்ப்புகளை மேற்கோளாக்கி மன்னிப்புக் கேட்கலாம். ஆனால் வீண்கதைகள்பேசி, பாவமன்னிப்புகள்கேட்கும் ஆண்டிமடமல்ல இது. இங்கே சட்டம்தான் பேசவேண்டும். அதற்காகத்தான் உங்களையும், என்னையும், எல்லோரையும் மக்கள் இந்த இடத்திலே நிறுத்தி வைத்திருக்கின்றனர். இங்கேவந்து நாம் விதண்டாவாதங்கள் பேசுவது அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றியதாகாது.

இந்த ராஜ்யத்தின் அட்வகேட் ஜெனரல் என்ற முறையில் உங்களிடம் மறுபடியும் கூறிக்கொள்ளுகிறேன்; ஆறுமுகத்திற்கு சட்டப்படி கொடுக்கவேண்டிய முழுத்தண்டனையும் தரவேண்டுமென்று! கொலைகாரர்களுக்கு, 'தூக்குமேடை' என்பது சட்டத்தில் வீணுக்குஎழுதிவைக்கப்படவில்லை. இம்மாதிரி பயங்கரக்கொலையாளிகளுக்குத்தான் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

நான்வாதிடும்சர்க்காருக்காகமட்டுமில்லை: உத்தமநாதர் குடும்பம், பொன்னியின் குடும்பம், மற்றும் இந்தநாட்டில்வாழும் அத்தனை நன்மக்கள் சார்பாகவும் கூறுகிறேன், இந்தப் பயங்கரக் கொலைகாரனை இனிஉயிரோடு விட்டுவைக்கப்படாதென்று!

ஆறுமுகத்தின் பொறுப்பு—குலம்—கோத்திரம்—கொடுமை என்றெல்லாம் கவைக்குதவாவாதங்கள் இங்கு பேசப்பட்டன. அவைகளுக்கெல்லாம் நானும் பதில் கூறிக்கொண்டிருக்கப் போவதில்லை.

ஆறுமுகத்திற்கு வாழவசதி செய்து கொடுக்கத்தானே, அவனை தன் காருக்கு டிரைவராக அமர்த்திக்கொண்டார் உத்தமநாதர். அவனுக்குப் பங்களாவிலே ஒருவேளை சோறும், தங்க இடமும் கொடுத்தார். ஒரு தனிப்பட்ட மனிதன் அதற்குமேல் என்னதான் செய்ய முடியும்?

ஆறுமுகம் தாழ்த்தப்பட்டவன் என்று தெரிந்திருந்தும் அவனை எவ்வளவு சமானமாக நடத்தினார்கள், புஷ்பா அம்மையார். இவனுக்கு அப்பொழுதுகூட நன்றி வரவில்லையே?

அவன் வேலைக்குச் சேர்ந்த 24-மணி நேரத்திற்குள் இரு கொலைகள் செய்திருக்கிருனென்ருல், அவனுடைய கெட்ட குணத்திற்கு வேறென்ன சான்று தேவை.

இன்று நேற்றல்ல. நீண்ட நாட்களாக ஏதேதோ குற்றங்கள் புரிந்தவன் இவன். இதுவரை நம்முன் கொண்டுவரப்படாத குற்றங்கள் ஏராளம். இந்த பேய்க் குணம் படைத்தவன் இன்றுதான் மாட்டிக்கொண்டான். கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டால் தண்டனை குறையுமென்ற தந்திரம் வேறு, செய்கிருன். சரியான சாட்சியங்களினுல், அவனுடைய குற்றங்களை நிரூபித்திருக்கிறேன். இனி மேலும் அவன் தப்புவிக்க எந்த வழியும் கிடையாது. ஆகவே சட்டப்படி அவனுக்குக் கொடுக்கப்படக் கூடிய முழு தண்டனையும் தர வேண்டும். இந்தக் கொலைகாரன், சிறையிலிருந்து தப்பிவிடுவான் என்றுகூட அல்ல; இப்படிப் பட்டவர்களுக்கு இங்கே என்ன தண்டனை தரப்படுகிறது என்று தெரிந்தால்தான், நாட்டிலே மேலும் பல ஆறுமுகங்கள் உற்பத்தியாகாமல் இருப்பர். ஆகவே இந்தக் குற்றவாளி நிச்சயம் தூக்கில் ஏற்றப்பட வேண்டும். இதிலே பரிதாபம் காட்டுவதில் அர்த்தமே இல்லை. நாட்டிலே நல்லோர்கள் நிம்மதியாகத் தூங்கவேண்டுமானுல், ஆறுமுகத்திற்கு முழுத்தண்டனை தான் தரப்பட வேண்டும்!" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டுப் போய் அமர்ந்தார் சார்க்கார் வக்கில்.

நெடுமாறன் பேசியபோது வந்த உணர்ச்சி எங்கேயோ ஓடிவிட்டது ஆறுமுகத்திற்கு. உண்மைதானே! என்னதான் பேசினுலும் இரு கொலைகளும் அவன் செய்ததாகத் தானே ஒத்துக்கொண்டிருக்கிருன்!

நீதிபதி மேஜையைத் தட்டிய வண்ணம் "நாளை காலை, நீதி வழங்கப்படும்!" என்று கூறிக்கொண்டே எழுந்தார்.

உடனே கோர்ட்டிலிருந்தவர் எழுந்து வெளியேறினர், அவர்களைத் தள்ளிக்கொண்டு பத்திரிகை நிருபர்கள் ஓடினர். ஆறுமுகம் அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்துகொண்டிருந்தான். வழக்கின் முடிவைப்பற்றி யாருமே சந்தேகப்படவில்லை!

(தொடரும்)

5-ம் பக்க தொடர்ச்சி

இங்கே, ஒவ்வொரு 'யூனிட்'டிலும் பெரியா படம் மாட்டப்படுகிறது—வந்தது மாலெங்கோவ்! பெரியா தூக்கில் தொங்கவிடப்பட்டார்! எனத் தெரிந்ததும், அதேபோல இங்கும் செய்ய முடியாததால், படங்களை மாற்றுகின்றனர். இந்த மனப்பாங்குதான், இன்னும் பலருக்குப் புரியவில்லை!

ரஷ்யா—அதை, மதிக்கவேண்டும், புதுயுகம் அது; நமக்கெல்லாம், ஓர் இலட்சிய தீபம். அதற்காக, மாஸ்கோவில் இடிஇடித்தது, மன்னூர்குடியில், பெரு மழை! என்ரு, கூறமுடியும்? இவ்வண்ணம், கேட்பதால்தான் இங்கேயிருக்கிற கம்யூனிஸ்டு தோழர்கள், நம்மீதுபாய்கின்றனர்! ஏதேதோ தேடி, வீசுகின்றனர்!! எனினும் சகித்துக்கொள்கிருேம், நாம். காரணம், அவர்களும் நாம் கூறிடும் கொள்கை நோக்கியே பிரயாணம் செய்கின்றனர்—என்பதுதான். இதனுலேயே, மாற்ருர் மருளுமளவில் நவம்பர் புரட்சி மலர், ஸ்டாலின் படத்திறப்பு, முதலிய எதனையும் ஆர்வத்தோடு நமது தோழர்களும் செய்யத் தயங்குவதில்லை.

*

ரோஜா!—எவர் கையிலிருந்தாலும், மணம்தரும். அது, என் கையிலிருந்தால் தான் மணக்கும் எனக்கூறுவது, பொருந்தாது. அதைப்போலத்தான் பொதுவுடைமைக் கொள்கைகளும். அவை ஒன்றும் 'பேடண்ட்' சரக்கு அல்ல—வியாபாரிகள் விளம்பரம் செய்கிருர்களே, ''டிரேட் மார்க்கைக் கவனித்து வாங்குங்கள். போலிகளை நம்பி ஏமாருதீர்கள்'', என்று அதுபோலச் சொல்லுவதற்கு. ரோஜாமலர்களை அப்படியேகூந்தலிலே சொருகுவோருமுண்டு—மாலையாக்கி அணிவோருமுண்டு. அதைப்போலவே பொதுவுடைமைக் கொள்கைகளையும், தமது நாட்டின் நிலை, அரசியல் சூழ்நிலை ஆகியவைகளையொட்டி ஆக்கிக்கொண்டு பணிபுரிவது, வெறுக்கப்பட வேண்டியதல்ல. அவ்வண்ணம் பணிபுரிந்து வெற்றிபெற்ற வீரர்தான் டிட்டோ! ஸ்டாலின் காலத்தில் அவருக்கு ரஷ்ய பூமியில் இருந்தநிலையைவிட, மாலெங்கோவ் காலத்தில் ஓரளவு திருப்திகரமான நிலை வளர்ந்திருக்கிறது. அவ்வளவு எரிச்சல் இல்லை! இந்த நவம்பர் 29ந்தேதி, மாஸ்கோவிலிருக்கும் யுகோ தூதர் நடத்திய விடுதலை தினத்தில் மாலெங்கோவ் உள்பட பலர் கலந்துகொண்டு கௌரவித்திருக்கின்றனர். இதனை, இங்குள்ள தோழர்கள் உணர வேண்டும்!

டிட்டோ—வருகிருர், செயல் சின்னமாக.

பொதுவுடைமைக் கொள்கைகளை மனத்திலே நிறுத்திபாடுபடுவோருக்கு அவரும் ஒரு இலட்சியச்சின்னம்தரன்.

எனவே, அந்த வீரரை வாழ்த்துகிருேம் — அறிமுகப்படுத்துகிருேம், நாட்டுக்கு.

அவரைப் பண்டிதர் அழைத்திருக்கிருர்! இந்த அழைப்பு, ராஜதந்திர நோக்கம்கொண்டது. எனினும், சொல்லைச் செயலாக்கிய அந்தவீரரை, சொல்லைக் காற்றிலே பறக்கவிட்ட இந்தச் சுதந்திரர் சந்திக்கப் போகிருர். நேருவின் துணிவு பாராட்டக்கூடியதுதான்! யாருக்கு வரும் இந்தத் தைரியம்!!

வரும் டிட்டோ — வரவேற்பைப் பெறக்கூடும்—தாஜ்மஹாலைக் காணக்கூடும்—சரித்திர சின்னங்களுக்கு அழைத்துச் செல்லப்படக்கூடும் - காந்தியார் சமாதிக்கு அஞ்சலி செய்யக்கூடும்.

இத்தகைய வெற்றி வீரர்களை அழைத்துப் போற்றும் நிலைமைக்குத் திராவிடம் இல்லையேயென வருந்துகிருேம்! அந்த நிலையைப் பெற — இங்குள்ள தோழர்களும் ஒத்துழைத்தால்—எவ்வளவு நன்ருயிருக்கும்!! ஏசிடும் போக்கை மறந்து, மனிதாபிமானம் கொண்டால், எவ்வளவு விரைவில் மகிழ்ச்சியைப் பெறலாம்!! மறந்து விடவேண்டாம் — யுகோ, இரண்டு கோடிமக்கள் கொண்டநாடுதான்—முப்பதுகோடியினர் வாழும் பூபாகம் அல்ல. அதனை விடுவித்து, தமதிஷ்டப்படி, பூஞ்சோலையாக்க, டிட்டோவாலும் தோழர்களாலும் அங்கே, எளிதில் முடிந்தது. அவர்கள் ஊருக்குக் குடைபிடிக்க விரும்பவில்லை! தங்களை முதலில் தற்காத்துக்கொள்ள விரும்பினர்!! அதனுல்தான் டிட்டோ, உலக அரங்கில் ஒரு விசித்திரமான இடத்திலிருக்கிருர். முதலாளிகளும் சீறுகின்றனர்! கம்யூனிஸ்டுகளும் ஏசுகின்றனர்! அவரோ, யுகோ கம்யூனிஸ்டுக் கட்சியின் குரலாக விளங்குகிருர் மக்களின் மாணிக்கமென, யுகோவில், போற்றப்படுகிருர், — தானும் மார்கஸ் பாதையில் சென்றுகொண்டிருப்பதாகச் சொல்லுகிருர்—இந்த மனத்துணிவும் நேர்மை உள்ளமும் நமக்கும் இருப்பதால்தான், இங்குள்ள தோழர்களின் சுடு சொல்லை, புன்சிரிப்போடு ஏற்றுக்கொள்கிருேம்—

"நடப்பதெல்லாம் நடக்கட்டும்!
சரித்திரத்தை
நடைமுறையில் மாற்றுபவர்
உழைப்பார் என்றும்
திடமான உண்மையினை அறிவதற்குச்
செல்லாது பலகாலம்!"

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் போதுமானதாக இல்லையாம்— சர்க்கார் தலையிட்டால், எதிரிகள், தப்பமுடிகிறதாம்—அப்படித் தப்பாமல் தடுக்க, புதியதோர் சட்டம் செய்யப்போகிருர்களாம்! எதற்கு? தில்லைத்தீட்சிதர்களின் சொந்தப் போக பூமியாக இருக்கும் சிதம்பரம் கோயிலை சர்க்காரது கண்காணிப்பிலே, கொண்டுவர அல்ல! தம்பிரான் மடங்களிலும், தர்ப்பாருரர் தம் திருவாழ்வுக்கு வழியமைக்கும் தேவாலயப் பொக்கிஷங்களிலும், சேர்ந்து கிடக்கும் பணத்தை பாலர் பள்ளிகளாக்க, அல்ல! தெருச் சுற்றுவோரின் துயர்துடைக்க அல்ல! பிடிசோற்றுக்கு அல்லாடுவோரின் மிடிமையை அகற்ற அல்ல! வேலையில்லாக் கொடுமையை ஒழிக்க, புது ஆலைகளை அமைக்க அல்ல! வாய்க்குப் பூட்டுப்போட! நாடகங்களைத் தடைசெய்ய!!

*

நடிகவேள் ராதாவின் நாடகங்களை, அரசு, தடைபோட்டு, தடைபோட்டு, வீழ்த்திற்று. இந்த வேதனை கூடாது—தடை செய்யும் அதிகாரம் சர்க்காருக்குக் கிடையாது—என்று, சென்னை உயர்நீதிமன்றம், தீர்ப்பு வழங்கிற்று. தில்லையினர் பெற்ற தீர்ப்புகண்டுகுமுருத கோலேந்திகள், இந்தத்தீர்ப்பு கண்டதும், புதியதோர்சட்டம் கொண்டு வரப்போகிருர்களாம்! புறப்பட்டிருக்கிறது, ஒரு மசோதா!!

**மத உணர்ச்சியைப் புண்படுத்தவும்,**
**வினியோக உரிமையை தடுத்துத் தூண்டவும்,**
**அரசாங்கததைக் கவிழ்க்கவும்,**
**கொலையைத் தூண்டவும,**
**போலிஸ்—ராணுவம் கடமையுணர்ச்சியைத் தடுக்கவும்,**
**ஆபாசத்தை உண்டுபண்ணக் கூடியதும்,**

ஆன, நாடகங்கள் தடுக்கப்படுமாம்! அதற்காக இந்தச் சட்டமாம்!! மசோதா, பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

'ஐயா, பசிக்கிறது' என்று மக்கள் அலறியபோது, 'பரமனைப் பஜி; பக்தர்களைத் துதி' என்று மார்க்க போதனை செய்து, அது எதுவும் குமுறும்வயிற்றின்பசியையடக்காத காரணத்தால், கொதித்துக் கிளம்பிய மக்கள், விழியை நடனமாகவும், குரலை கீதமாகவும், நடையை நாடகமாகவும் ஆக்கத் துவங்கியதும்— அவர்கள்மீது சட்டங்களை வீசி, மட்டம் தட்ட முயன்று, மண்ணுக்குள்ளே புதைந்துபோன மண்டலேஸ்வரர்கள், ஏராளம். நாடகங்களைக் கண்டு, மிரண்ட அரசுகள் பல உண்டு, வரலாற்றில்! உலகம் போற்றும் உன்னத மேதை பெர்னுட்ஷா தீட்டிய நாடகங்களை, முதன் முதலாகக் கண்ட பிரிட்டிஷ் பிரபுக்கள், ஆனந்த ஆரவாரம் செய்யவில்லை. அரசை நாடி, அடக்கவே முற்பட்டனர். இப்ஸன் என்பானும், எமிலிஜோலாவும், அவனைபபோன்று இலக்கிய உலகிலும், எழுத்து வானிலும் சஞ்சரித்த பற்பல சிந்தனைச் சிற்பிகள்—ஆரம்பத்தில் பெற்ற பரிசுகள், அடக்குமுறைதான் – வேறல்ல. அவர்கள் மீது, ஆங்காங்கே இருந்த அரசுகளும், அந்த அரசை ஆட்டிப்படைக்கும் வலிமை பெற்றிருந்த மதவாதிகளும், சென்னை அரசாங்கம் இன்றைய தினம் நாடகத் தடைக்கு என்னென்ன காரணங்களைக் காட்டுகிறதோ, அதே காரணங்களைத்தான் காட்டினர். சரிதப் புரட்சிகளைக்கண்ட நாடுகளிலே கூட அல்ல—'முண்டா' தட்டிடும் இதே காங்கிரசினரையும், அதே குற்றச்சாட்டுகளை வீசி, வெள்ளையர் மிரட்டியதுண்டு. அப்படி அதட்டிய வெள்ளையன் வைத்திருந்த சட்டம்—பழசாம் – எண்பது ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டதாம்— எனவே, 'புதுமை' செய்யப்போகிருர்களாம், புதுமை!

**அரசைக் கவிழ்க்க,**
**ஆபாசம் பரவ,**
**மக்களைத் தூண்ட,**
**மத உணர்ச்சியைப் புண்படுத்த**

முயன்றதாகத்தான் அவர்கள்மீதெல்லாம், ஒருபோது குற்றம் வீசப்பட்டது. அதே குற்றங்களை வீசிக்கொண்டு கூத்தாடப்போகிறதாம்— இன்றுள்ள சென்னை அரசு. அங்கெல்லாம், இந்த அடக்குமுறைகள் மிகப் பழையனவாகிவிட்டன — அதன் விளைவாக ஏற்பட்ட புரட்சியின் பாடங்களையும் அவை உணர்ந்துவிட்டன. புரட்சிக்கு வித்திடும் விபரீதப் பாதையில் செல்லும் அந்த மதி, இந்தச் சுதந்திரர்களுக்கு இப்போது அரும்பிவிட்டது. நாடகங்களில் ஆபாசம்—தூண்டுதல்—மத உணர்ச்சியைப் புண்படுத்துதல்— இருந்தால், அந்த நாடகங்களைத் தடைசெய்யுமாம்.

*  *  *

அதோ, நிர்வாணக்கோலத்திலே 'நீ, நான்' என்று பேசிக்கொண்டு கூத்தாடுகிருன்—ஒரு கோணங்கி...

என்ன பேசுகிருர்கள், மக்கள்?

"ஆகா, அற்புதமடா, அற்புதம்! நிர்வாணக்கோலத்தில் நிற்பதைக் காண ஆனந்தமாயிருக்கிறது. வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வா போகலாம்"

எவரும் கூறுவதில்லை. செச்சே- அசிங்கம்—ஆபாசம்—விரட்டு—ஓட்டு —பிடி, அடி!—என்று அவனுக்குக் கல்மழை தரப்படுகிறதேயன்றி, ரோஜாமாலை அல்ல.

*

"அகோவாரும், பிள்ளாய்! நான் சொல்வதைக் கேள். ஆட்சி புரிகிருரே—அமைச்சர். அவரை எப்படிக் கொலை செய்வது?"

"கொலைதானே, குருநாதா! இதோ செய்து காட்டுகிறேன், பாரீர்—கத்தியை இப்படித் தீட்ட வேண்டும்—கையிலே ஏந்த வேண்டும்—ஒரு போடு, இப்படிப்போட வேண்டும் — விழுந்ததா! உடலும் இரண்டாயிற்று!!—ஓடும் ரத்தம்—

வெளிவந்துவிட்டது

## திராவிடர் நாட் குறிப்பு 1955

இந்த டயரியில், உலக அறிஞர்களின் 365 பொன் மொழிகள், தி. மு. க. முழு விவரங்கள், சட்ட திட்டங்கள், பேச்சாளர்களின் முகவரிகள், அஞ்சல் பத்திரப் பதிவு கட்டணங்கள், விற்பனை வரி, வருமான வரி விவரங்கள், இரயில்வே, விமான கால அட்டவணைகள். மற்றும் பல அரிய செய்திகள் உள்ளன.

உயர்ந்த அழகிய கலிகோ பைண்டு. 500 பக்கம். **விலை ரூ. 1** செலவு தனி. விற்பனையாளர் கழிவு 20o/o. ஒரு டயரி வேண்டுவோர் ரூ. 1–3–0 அனுப்புக.

முன்பணத்துடன் தேவைக்கு எழுதுங்கள்.

குறிப்பு; —பல வகையான பொங்கல் வாழ்த்துக்கள் கிடைக்கும்.

**போர்வாள் அலுவலகம்,**
**பவழக்காரத் தெரு, சென்னை.**

பயப்படக்கூடாது—பேசாமல், ஓடி விடவேண்டும்! இதுதான் கொலே செய்கிறவழி!"

இப்படியொரு நாடகம்! எங்கும், நடக்காது! நடிகர்களும், மனிதர்கள் தான்!!

*

"டேய், நாமதாரி!"

"பயலே, நீறுபூசி!"

"பூணூலே அறுப்பேன்..."

"குடுமியை வெட்டுவேன்..."

"கோயில்களை இடிப்பேன்..."

இப்படியும், நாடகங்களில்யாரும் பேசவில்லை.

*

எனினும், நாடகங்களில், ஆபாசம்—ஆட்சியைக் கவிழ்ப்பது,—கொலேசெய்யத் தூண்டுவது—மத உணர்ச்சியைப் புண்படுத்துவது, ஆகியவைகள் தென்படுவதாகவும், அவைகளைத் தடுக்கவேண்டுமென்றும், அரசாங்க மசோதாவின் அறிக்கை கூறுகிறது.

அறிக்கையின் நகல் இப்படித் தெரிவிக்கிறதே ஒழிய, அதில் பொதிந்திருக்கும் நோக்கத்தை எல்லோரும் அறிவார்கள். இந்த கைய குற்றச்சாட்டுகளைச் சாட்டி, எந்த நாடகத்தையும் தடைசெய்து விடலாம். பிடிக்கவில்லையென்ருல், யாருடைய நாடகமாயிருந்தாலும் தடைசெய்துவிடலாம். ஒரு நாடகத்தில் வருகிற ஒரு சீன், ஒரு வசனம், ஒரு பாட்டு, ஒரு நடிகரின் நடிப்பு—எதை வேண்டுமானலும், இந்தக் குற்றச்சாட்டுகளுக்குக் கீழே கொண்டுவந்து, அந்த நாடகத்தைத் தடுத்து, நடித்தவரை ஆறு மாதத்துக்கு ஜெயிலுக்குள்ளே பூட்டி, கொட்டகை கொடுத்தவருக்கு அபராதம்போட்டு, அராஜகத் தர்பார் நடத்தலாம். கேட்டால்—அரசைக் கவிழ்க்கும் வசனம் இருக்கிறது – மத உணர்ச்சியைப் புண்படுத்தும் காட்சி இருக்கிறது—கொலேயைத் தூண்டும் சம்பவம் இருக்கிறது என்று கூறிவிடலாம்.

*

குடிலன், கொடியவன், ஆனல், மந்திரி! அவனுடைய கொடுமைகளால், மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர், இதனைத் தாங்காது, ஏறுபோல் எழுகிருன், ஒரு இளைஞன்—அடிபட்ட மான்களான மக்களைத் திரட்டிக்கொண்டு கிளம்புகிருன், வீரத்தோடு. அந்த மக்களைத் திரட்டும்போது என்ன பேசுவான்—நாம் அல்ல — அந்த நாடகத்து வீரனுக்கு ஒரு 'கல்கி'யே வசனம் எழுதினுல் என்ன எழுதுவார்—"ஆகா! நாம் என்ன பஞ்சைகளா? பராரிகளா? வரி செலுத்துகிருேம், சர்க்காருக்கு. நாம் செலுத்தும் வரியால் வாழும் மந்திரி நம்மை வாட்டுகிருர் — வாதைப்படுத்துகிருர். எத்தனை நாளைக்கு இதைச் சகிப்பது? வாருங்கள் போவோம்; இரண்டிலொன்றைக் கேட்போம். நமது இலட்சியத்தை ஏற்காவிடில்—போனுல், நம் உயிர்; பெற்ருல் புது வாழ்வு. ஒழிப்போம், இந்தக் கொடுங்கோலாட்சியை?"

இந்த 'சீனை'க் காண்கிருர் ஒரு போலீஸ் அதிகாரி—நடத்தப்படும் நாடகத்தை எழுதியவர் 'அவாள'க இல்லாமல் நமது தோழர் ஒருவராகயிருந்துவிடுகிருர் — அதிகாரிக்கோ, 'பிரமோஷன்' பெறும் கட்டம்—என்ன செய்வார்? நாடகத்தில் சர்க்காரைக் கவிழ்க்கும் வசனம் இருக்கிறது! ஆகவே 144! எங்கே அந்த நடிகர்கள்? இத்தனையாவது செக்ஷன்படி நாடகம் நடத்தியது குற்றம்—என்று, உடனே, பிறக்கத்தான் செய்யும்.

*

ஒரு நடிகர் குழாம்—நம்முடையதல்ல; மாற்ருருடையதுமல்ல — டி. கே. எஸ். சகோதரர்களுடையதைப்போன்றது, என்று வைத்துக் கொள்ளுங்கள். "சிவலீலா" நடத்துகிருர்கள். தத்ரூபம்! பிரமாதஜோடனை!—என்று ஊரே பாராட்டுகிறது. அந்த நாடகத்தில் ஒரு கட்டம் — மதுரையிலேயிருக்கிற ஒரு பார்ப்பன வாலிபன், பெற்ற தகப்பனைக் கொன்று, ஈன்றெடுத்த தாயைப் பலாத்காரமாக இச்சை தணிக்கும் கருவியாக்கி, அமர்க்களம் செய்து பிறகு ஆண்டவனருளால் கைலாசம் சேர்வதாக ஒரு காட்சி. சம்பவம், புராணத்திலிருப்பதுதான்! நடிக்கும் தோழரோ, தத்ரூபமாக நடிக்கிருர்! குழு, நாஸ்திகக்குழு அல்ல—ஆனல் நாடகத்தைப் பார்க்கும் வரதாச்சாரிக்கோ, சந்தேகம் வருகிறது — "டி. கே. எஸ், என்ன இருந்தாலும் ராஜ மாணிக்கம் ஆகுமோ? சில வேளைகளில் சமூக சீர்திருத்தம் என்று சொல்லும் பேர்வழியேல்லோ! புராணத்திரையில், இப்படிச் செய்யலாமேல்லோ!"—வரதாச்சாரியோ, கலெக்டர், அந்த ஜில்லாவுக்கு புதிய சட்டம் என்னசெய்யும்? பாயும்! நாடகம் தடையாகும்! ஏனெனில், நாடகத்தில், ஆபாசத்தைத் தூண்டும் சம்பவம் இருக்கிறது.

"இதே ஆபாசம் 'நவாப்' கம்பெனி நடத்தும்போது தென்படவில்லேயே?"

"இவா, தத்ரூபமான்னு நடிக்கிருு?"

"அதுதானே — நடிப்பின் லட்சணம்!"

"நவாப்னு, பக்திசிரத்தையோடு நடத்துருர்......"

"இவர்களுக்குமட்டும் அந்தப் பக்தி இல்லேயோ......"

"என்ன இருந்தாலும்......!" ஏதோ, ஒரு எரிச்சல். விளைவு, நாடகம் தடை!

*

இப்படிப்பட்ட சம்பவங்கள்' ஆட்சியாளருக்குப்பிடிக்காதவர்கள் நடத்துவது—அதிகாரிக்குப் பிடிக்காத விஷயம் இருக்கிறது—சட்டத்திலிருக்கிற ஷரத்துப்படி தூண்டும் தன்மையிலிருக்கிறது—என்று, காரணங்களைக்காட்டி, எந்த நாடகத்தையும் சர்க்கார் தடுத்து விடமுடியும்.

"எந்த" நாடகத்தையும் என்று குறிப்பிடும்போது, "நவாப்" களின் நாடகங்களை, நாம் குறிப்பிடவில்லை —அவைகள், பக்தி முத்திரை குத்தப்பட்டு விட்டவை. அந்த முத்திரையில்லாமல், அதேநேரத்தில் நமது கூடாரத்தையும் சேராமல், புதுஉணர்ச்சி கொண்டு நாடகம் நடத்துவோரையும் சென்னையாரின் சட்டம் சிறையில் பூட்டும்.

*

இப்படியோர் சட்டம்! அதுவும் இந்த நேரத்தில் கொண்டுவரப்பட வேண்டியஅவசியம் என்ன? நாடகக் **கலேயின் தரத்தை உயர்த்தவா!**—அல்ல அல்ல. அந்த எண்ணம் இந்த அரசுக்கு இருந்திருக்குமேயானல், டில்லிக்கு 'சிவகாமியின் சபதத்தை', செல்ல அனுமதித்திருக்காது. பிற நாட்டுப்பித்தர்கள், வளரும் புதுமையைக்கண்டு, வரிந்துகட்டிப் புறப்பட்டதுபோல இங்குள்ள புரோகிதாச்சாரிகள் புறப்பட்டிருக்கின்றனர், இன்று. நாடகப் பூங்காவிலே, நறுமணமலர்கள்பலபூத்துக் குலுங்குவது, கண்களைக் குத்துவதால், கயமைப்பாதைபுகத்துவங்கி

யுள்ளனர். கடந்த பத்து ஆண்டுகள்! தென்னாட்டின் கலைத்துறையில் ஓர் திருப்புக் கட்டம் தென்படச்செய்திருக்கின்றன. நடிகர்கள், கிருதாமீசையோடு நின்றுவிடாமல், சில எண்ணங்களுக்காகவும், பாடுபடத் துவங்கியிருக்கிறார்கள். ரூபா—அணா—பைசாக்களுக்கு மட்டும் அல்லாது சில இலட்சியங்களுக்காகவும் கலையைப் பயன் படுத்தும் பக்குவம் பெற்றிருக்கிறார்கள். அதனால், நறுமண மலர்களைக் காண்கிறோம், நாடகங்களில்! நல்ல தமிழ்வாடையை ரசிக்கிறோம், எழுத்துக்களில்! பண்டைய புகழும், அதனை மீண்டும் பெறும் ஆர்வமும், அலைமோதுகின்றன காட்சிகளில்!! இந்த நற்காட்சி விரும்பா, நாசகாலர்கள், உறுமக் கேட்டோம்—இப்போது ஊராள்வோர் தயவு உண்டென்பதால், இத்தகைய இலட்சிய நடிகர்களை மட்டந்தட்ட 'மயிலை'யிலும் 'திருவல்லிக்கேணி'யிலும் சதி அரங்குகள் வைத்து, நிதிபலபெற்று, ஆதிக்கத்துக்கு அடிமைப்படுத்த, அரசையும் நாடியிருக்கின்றனர். இவர்கள், யார்? நாடு அறியும்! நடிகமணிகளும் அறிவார்கள்!!

நாடகக்காரன்.

கல்வி வாசனையற்றவன்.

'கிருதா கிராப்'காரன்.

சாஸ்திரிய சங்கீதமறியாதவன்.

அரியக்குடி ஆகுமோ?

அனந்த கிருஷ்ணய்யரைப்போல உண்டோ?

ஆபாச நடிகர்கள்.

'ஷேக்ஸ்பியர்' தெரியாதவர்கள்.

இப்படியெல்லாம் ஏசிப் பேசினர்—ஏடுகளில் தீட்டினர்—எரிச்சலைக் கொட்டிக்கொள்ள. எத்தனையோ பாதைகளைப் பெற்றனர்—சந்தர்ப்பம் நேர்ந்தபோது சர்க்காரைத் தூண்டி தடைகளையும் பிறப்பிக்கச் செய்தனர் – கடைசி கட்டமாக 'தமிழ் நாடகக் கலையின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களே' என்று காட்டிக்கொள்ள டில்லி செல்லும் வாய்ப்பையும் பெற்றனர். இதைப்பற்றி மனம் துடித்திருக்கவேண்டும், மாகாணத்தை ஆளும் மாட்சி பெற்ற மகிபர்களுக்கு. நாளெல்லாம் பாடுபட்டு, நடிப்பால், கலையையும் நாட்டின் நிலையையும் உயர்த்தப் பாடுபடும் நடிகமணிகளின் குரலுக்கு மதிப்பளித்திருக்கவேண்டிய சர்க்கார்—நடிகர்கள் சங்கம் தமது குமுறலைத் தெரிவித்தும் அதுபற்றி எதுவும் கூறாத சர்க்கார்—இப்போது, அவர்களுக்குப் 'பரிசு' வழங்க வருகிறது. அவர்கள் நடத்தும் நாடகங்களுக்கு வாய்ப்பூட்டு போடப்படுமாம். நாடகம் நடத்துவோரை மிரளச் செய்யுமாம். கொட்டகை கொடுத்தால் கூட ஆறுமாத சிறைத் தண்டனை வழங்கப்படுமாம்.

பழி வாங்கும் கும்பல் 'டில்லி' போகிறது—பாராட்டுப் பெற.

பாடுபடும் இனம் 'பரிசு' பெறுகிறது—நாடகத் தடைச் சட்டம் ஒன்றை.

இந்த வேதனையை எண்ணிடத் தவறார், எவரும். இந்த நேரத்தில்—நடிகமணிகளெல்லாம் புண்பட்டிருக்கிற நேரத்தில், இப்படியோர் சட்டம் வரக் காரணமென்ன? 80 ஆண்டுகளுக்கு முன் வெள்ளையன் ஏற்படுத்திய சட்டத்திலிருந்த ஓட்டை உடைசல்களை இப்போது அடைக்கவேண்டிய அவசியம் என்ன? இந்த ஓட்டை உடைசல்களால், இதுவரை நாட்டில் எத்தனை எத்தனை இடங்களில்—கொலை—சர்க்காரைக் கவிழ்ப்பது—ஆபாசம் பரவுவது—ஏற்பட்டிருக்கிறது? இதே ஓட்டை உடைசலை அடைக்கவேண்டுமென சர்க்காரின் சட்ட இலாகாவுக்கு முகிழ்த்திருக்கும் இந்த நல்லறிவு, தில்லை தீட்சிதர்கள் 'சுப்ரீம் கோர்ட்டிலே' வெற்றி பெற்றபோது ஏன் ஏற்படவில்லை. நாடகத் தடை சட்டம் கொணர 'சக்தி' இருக்கிறது எனக் காட்டிக்கொள்ளும் சர்க்கார், நாட்டின் பொதுச் சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமையைப் பெற, ஏன் ஒரு சட்டத்தைக் கொணர முயலவில்லை. ஆண்டுகள் இரண்டாகிப் போயின—சர்க்காரின் சட்டஇலாகா தூங்குகிறது, இன்னும். ஆனால், 'நாடகங்களைத் தடைசெய்யக் கூடாது' என உயர்நீதி மன்றம் உத்தரவிட்டு திங்கள் இரண்டுகூட ஆகவில்லை—தீப்பொறிபோல வருகிறது, மசோதா; சர்க்காரின் சட்ட இலாகாவிலிருந்து!

ஏன்? அத்திசை, கொட்டிடும்! இது, பணியும்!!

இதுதவிர வேறென்ன காரணம் இருக்கமுடியும்? நாட்டில்நன்மைகள் மலரச் செய்யவேண்டிய காரியங்கள் ஏராளம் உண்டு—அவைகளுக்கான சட்டங்கள் இல்லை. நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான

---

ராஜ்கட் நவ: 13:- ஒரு திருட்டு வழக்கில் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்காக ஒரு நபரும் ஒரு தாயாரும் கொதிக்கும் எண்ணெயில் கைகளை தோய்க்கும்படி செய்யப்பட்டதாகவும், அவர்களது கைகள் வெந்து, இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

**1954-ல் இந்தச் செய்தி!**

நியூயார்க் ஏப்: 3:- மைசூரைச் சேர்ந்த புட்டப்பா சிவபாசப்பா எனும் ஒருவர் கடந்த ஆறுமாத காலமாக இங்கே வந்து, குற்றங்களைக் கண்டுபிடிப்பது பற்றி தான் செய்துள்ள ஆராய்ச்சிகளை விளக்கினார். விரைவில், இந்தியா திரும்புகிறார். விஞ்ஞானக் கருவிகளின்மூலம், **குடிகாரனையும், கொலை செய்தவனையும், குற்றவாளியையும்** கண்டுபிடிக்கும் கருவிகளை, இந்தியாவில் கண்டுபிடித்துள்ள முதல் ஆசாமி இவர்.

**1949-ல் வந்த செய்தி இது!!**

புட்டப்பா, என்ன ஆனார்! அரசு, ஆதரவு தந்து அத்தகைய கருவிகளைத் தயாரிக்க முயற்சி செய்ததா? எவரும், அறியார்!! இங்குள்ள ஏடுகளும், அதைப்பற்றி, எதுவும் அறியா. ஆனால் 'ராஜ்கட்' செய்திகள் மட்டும், அடிக்கடி வருகின்றன. அறியாமை ஒரு பக்கம்! அறிவொளி மற்றோர் திசையில்!! அறிவொளிக்கு ஆதரவில்லை—இங்கே. அறியாமையோ, அரசோச்சுகிறது, இன்னும். ஆள்வோர் கண்ணிலோ, இரண்டும் தென்படுவதில்லை. தென்பட்டாலும், 'அகில உலக சமாதானம்' பெரிதாகத் தெரிகிறதே ஒழிய, இதுபோன்றவைகளுக்கு ஆதரவு காட்டப்படுவதில்லை. இந்த நிலையில், இந்தியா, பெரிய தேசமாம்! அதன் முன்னேற்றம் கண்டு எல்லோரும் மூக்கின் மேல் விரலைவைக்கின்றனராம்!! அறிவு, மறைக்கப்படுகின்றது. அறியாமை, தாலாட்டப்படுகின்றது.

ஏக்கருக்கு, ஒருவனே அதிபதியாயிருக்கும் கோரம் இருக்கிறது! குந்தவும் இடமில்லாமல் அலையும் குப்பர்களின் கூட்டமும் கிடக்கிறது!! இதனைச் சீர்திருத்த சட்டம் இல்லை—சட்டம் வரப்போவதாக சர்க்கார் செப்பி, எவ்வளவோ காலமாகிறது—எனினும் ஒரு சட்டம் வரவில்லை. ஆனால், வாய்ப் பூட்டுபோட, புறப்படப்போகிறதாம், புதியதோர் சட்டம்! இதனால் ஏற்படும் விளைவுகளையும் வேதனைகளையும், ஆட்சியாளர் ஏற்க நேரும் என எச்சரிக்கிறோம். நடிகமணிகள், தூங்கிக்கிடந்தகாலம் அல்ல, இது! நடிப்புடன் துடிப்பும் பெற்றிருக்கும் புதுயுகம், இப்போதிருப்பது!! அவர்கள்வாய்க்கும், தொழிலுக்கும் பூட்டுப் போட்டு வாழநினைக்கிறது—போக போக்கியத்தில் திளைக்கும் மைலாப்பூரும் மாம்பலமும். அவைகளுக்கு ஆதரவு தரும் விதத்தில், ஒரு அரசாங்கம் செல்வது—ஆபத்து! ஆபத்து!! "அவர்கள் சிலர்; நாம் பலர்"—இதனை சட்டம்கொணரும் அரசு, அறியவேண்டும்! இதுபோல அடக்குமுறைச் சட்டங்களைக் குவித்து அழிந்துபோன அரசுகளைப்பற்றியும் எண்ணவேண்டும்!! அமைச்சர் சுப்ரமணியம் ஆசைக்காக ஒரு சட்டமும், 'அல்லாடி'களின் பாராட்டைப் பெறுவதற்காக ஒரு சட்டமுமாக, அம்புருத்தூணியிலிருந்து கிளம்பும் அம்புகளைப் போலக் கிளம்பி, நாட்டைத் தாக்க 'மசோதா'க்கள் வருவதென்றால்—இதுபோன்ற ஆபத்துக்களை நாடு தாங்காது; நாட்டு மக்களும் வரவேற்கார். காலம் மாறுகிறது—கவனமிருக்கட்டும் என எச்சரிக்கிறோம். வேதனையான செயல். விளைவு விபரீதமாகும். எதிர்காலம் ஏசும்.

★

# கர்நாடக திராவிட முன்னேற்றக் கழக
# முதல் மாநாடு

**வருகிற டிசம்பர் 18, 19 சனி ஞாயிறுகளில் பெங்களூரில்**

**மஜீத் பந்தலில் கைலாசம் அரங்கில் நடைபெறும்**

சனி 18—12—54

சமுதாய சீர்திருத்த மாநாடு

தலைவர்:

**காஞ்சி கலியாணசுந்தரம்**

திறப்பாளர்:

**ப. உ. சண்முகம்**

ஞாயிறு 19—12—54

அரசியல் மாநாடு

தலைவர்

**என். வி. நடராசன்**

திறப்பாளர்

**திருமதி அருண்மொழி B. O. L.**

இரண்டு நாட்களிலும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், க. அன்பழகன், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். இராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இசை முரசு நாகூர் அனிபா குழுவினர் இசை விருந்து வழங்குவர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினருடன் "நான் கண்ட ரஷ்யா" வில்லுப்பாட்டு நடைபெறும்.

**மாநாட்டுக் கட்டணம் (இரு நாட்களுக்கும்)**

வரவேற்பாளர் ரூ 3, பிரதிநிதி ரூ 2, பார்வையாளர் ரூ 1, பெண்கள் அணா 8.

வ. கு. தலைவர்: எஸ். ஜே. உசேன், எஸ். வி. [illegible]தி

பொருளாளர்: எம். ஆர். பெருமாள்,

செயலாளர்கள்: ஏ. டி. பிரான்சிஸ், செ. விழியன்

விளம்பரக் குழு: கி. சோழன், வெங்கடசாமி.

தொண்டர் படைத் தலைவர்: ஆர். ராகவன், துணை: சு. கண்ணன்

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95 Tirukkachinambi St, Kancheepuram.